
# ஜாமக்காரன்

# JAMAKKARAN

VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 8

JULY 2019 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=



*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

ஜாமக்காரன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பானவர்களே,

உங்களுக்கு சமாதானம் உண்டாயிருப்பதாக.

கடந்த இரண்டு மாத ஜாமக்காரனில் Tribal Mission Hospital விபரங்களையும் அதன் தற்போதைய பண நெருக்கடியையும் குறித்து எழுதியிருப்பதை வாசித்த பலர் பல்வேறு இடங்களிலிருந்து Dr. Muralidhar,M.D. அவர்களுக்கு ஆஸ்பத்திரி செலவுக்கான உதவி தொகை அனுப்பியதாக அறிவித்தார்கள். மிகவும் நன்றி கூறுகிறேன். தொடர்ந்து அவருடைய email ID மூலமாக மற்ற விவரங்களையும் அவரிடம் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.

**Dr. K. MURALIDHAR,**
e-mail : muralidar.anaikatty@gmail.com,
Bank : The Catholic Syrian Bank, Perumbavoor,
SB A/c No. 0156-00706354-190001, IFSC : CSBK0000156.

Tribal News என்ற செய்தித்தாள் ஆங்கிலம், தமிழ், மலையாளம் ஆகிய பாஷைகளில் வெளியிடுகிறார்கள். நீங்கள் அவர் விலாசத்திற்கே எழுதி கேட்டு அதன் சந்தா விவரம் அறிந்து அந்த செய்தித்தாளை பெற்று ஜெபிக்கலாம்.

- இந்தியாவில் கடந்த தேர்தலில் **காவி கட்சி** (திரு. மோடி) அவர்களின் ஆட்சி பெரும் மெஜாரிட்டி பெலத்தோடு வந்ததிலிருந்து சிறுபான்மையினரான கிறிஸ்தவர் குறிப்பாக இஸ்லாமியர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

# AUGUST - 2019

## இந்து முன்னணியரின் பேயாட்டம்

**கர்நாடகா** மாநிலத்தில் மட்டும் 9 **கிறிஸ்தவ சபைகள், பாஸ்டர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.** தமிழ்நாட்டில் 18 இடங்களில் கிறிஸ்தவ சபைகளும். துண்டு பிரதிகள் விநியோகித்த கிறிஸ்தவ விசுவாசிகளும் தாக்கப்பட்டனர்.

காவல் நிலையத்தினர் எந்த புகாரையும் பதிவு செய்யவில்லை. காரணம் ஆளும் கட்சி BJP. RSS கட்சிகளில் அடிமைகளாகி போனதால் நடவடிக்கை எடுத்தால் காவி கட்சியினரின் கோபத்குள்ளாவோம் என்ற பயத்தில் தங்கள் பதவியை காப்பாற்றிக்கொள்ள போலீஸ் கைகள் கட்டப்பபட்டன. பீகார், ஒரிசா, மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம் ஆகிய பல மாநிலங்களில் **இந்து மத பாதுகாப்பாளர்கள்** இந்து **முன்னணி இயக்கக்காரர்கள்** கிறிஸ்தவர்களையும் குறிப்பாக **இஸ்லாமியரையும் ஜெய்ஸ்ரீராம்** என்று சத்தமாக கூறச் சொல்லி பொது இடத்தில் அவமானப்படுத்தி உள்ளார்கள்.

### வட இந்திய ரயில் சம்பவம்

□ வட இந்திய பயணத்தில் ரயில் பயணம் செய்துகொண்டிருந்த பயணிகளில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தினர் **ஜான்சி** என்ற ரயில் நிலையத்தை கடந்து போய்கொண்டிருக்கும்போது இரவு தூங்கும் நேரம் வந்தபோது வயதுமுதிர்ந்த ஒருவர் உடல் தளர்ச்சியில் தூக்கம் வருவதற்கு அடையாளமாய் கொட்டாய் (Yoning) வாய் திறந்து கோட்டுவாய் விட்டபோது **ஏசப்பா** என்று பெரும்மூச்சோடு உச்சரித்தார். அவ்வளவுதான். பக்கவாட்டில் உட்கார்ந்திருந்த 5 அல்லது 6 பேர் கோட்டுவாய் விட்ட பெரியவரிடம் **ஜெய்ஸ்ரீராம்** என்று சொல்லு என்று அந்த வயது முதிர்ந்தவரை மிரட்டி கலாட்டா செய்தார்கள். அப்போது அந்த பெரியவர் அடுத்தமுறை கொட்டாய் வரும்பொழுது ஞாபகம் வந்தால் கூறுகிறேன் என்றதற்கு அவர்கள் பெரும் கோபாவேசத்தோடு **ஜெயஸ்ரீராம் ஜெய்ஸ்ரீராம்** என்று சத்தமிட்டு அவரை மிரட்டி கடைசியில் அவர் மெதுவாக **ஜெய் ஸ்ரீராம்** என்று கூறி அழுதுவிட்டார். அவர் கூட பயணம் செய்த குடும்பத்தின் **பெண்கள்** சிறு பிள்ளைகள் தாக்கப்படாமல் இருக்க அப்படி அவர் ஜெய்ஸ்ரீராம் என்று கூறவேண்டியதாயிற்று. அது எத்தனை கடினமான **சூழ்நிலை** என்று கற்பனை செய்து பாருங்கள்.

### ஜெய் ஸ்ரீராம் என்று கூற கட்டாயப்படுத்துதல்

□ அதே சமயம் ஜார்கண்டில் ஒரு கிராமத்தில் ஒரு முஸ்லீம் வாலிபனை **இந்து முன்னணியினர்** சூழ்ந்துகொண்டு **ஜெய் ஸ்ரீராம்** என்று சத்தம்போடு என்று கூற நான் எதற்கு அப்படி கூற வேண்டும்? என்று அவன் பதில் கூறியவுடன் அவன் கைகளை மரத்தோடு சேர்த்து கட்டி தடியினாலும் காலினாலும் எட்டி உதைத்து சித்திரவதை செய்துள்ளார்கள். அவன் ஒரு வார்த்தைகூட ஜெய்ஸ்ரீராம் என்ற உச்சரிக்காமல் **அல்லா அல்லா** என்று அழுதுகொண்டு சத்தமிட்டிருக்கிறான். அந்த படக் காட்சி



அடித்து கொல்லப்பட்ட முஸ்லீம் வாலிபன்

**வாட்ஸ்அப்பில்** இன்று வைரலாக பரவி பத்திரிக்கையிலும், பார்லிமெண்டிலும் வெளியிட்டார்கள். எல்லா MPக்களும் இது குறித்து கண்டித்துள்ளனர். இதன் இடையே அந்த பையன் அந்த **இந்து தீவிரவாதிகளிமிடருந்து** சிலரால் காப்பாற்றப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான். ஆனால் பலத்த காயம் காரணமாக அவன் மரித்து போனான்.



- ☐ மஹாராஷ்ட்ராவில் (தானே) திவா ஆகுசன் ரோட்டில் ஓலா டாக்ஸி ஓட்டிசெல்லும் போது கார் பழுதுபட்டு ரோடு ஓரத்தில் பயணிகளுடன் நிறுத்தப்பட்டது. அந்த வழியே வந்த மூன்று வாலிபர் கார் ஏன் நிற்கிறது என்று கேட்டனர். பின் உன் பெயர் என்ன? என்ற போது பைசல் உஷ்மான் என்று கூறியவுடன் ஜெய் ஸ்ரீராம் என்று சத்தமாக சொல்லும்படி அடித்து உதைத்தனர். ஆனால் அவன் கூறவில்லை. அடித்துபோட்ட அந்த வாலிபர்கள் மோட்டார் பைக்கில் ஏறி ஓடிவிட்டனர். இது பம்பாயில் கடந்த ஒரு மாதமாக அடிக்கடி நடக்கும் சம்பவமாக இருக்கிறது. இந்திய **பிரதமர்** அவர்கள் பார்லிமெண்டில் அதற்காக வருத்தம் மட்டுமே தெரிவித்துள்ளார்.

- ☐ இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களில் **காவி கட்சி** (BJP. RSS) கட்டுப்பாட்டிற்குள் வர ஒவ்வொரு மாநிலத்திலுள்ள MLAக்கள் பெரும் தொகைக்கு விலை பேசப்பட்டுள்ளார்கள். இதை எழுதி முடிக்கும்போது **கர்நாடகா** மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நீக்கப்பட்டு **காவி கட்சியின்** ஆட்சியில் அமர்ந்துவிட்டது. இப்படி பல மாநிலங்களில் உள்ள MLAக்கள் **பல கோடிகளுக்கு** விலை பேசப்படுகிறதாக கூறப்படுகிறது. கர்நாடகாவில் ஒரு MLAக்கு 20 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டதாக கேள்விபடுகிறோம். அப்படி சுமார் 19 MLAக்கு கொடுக்கப்பட்டதானால் மொத்தம் எத்தனை கோடி செலவழித்துள்ளார்கள். இந்த பணம் எங்கிருந்து வந்தது? இந்திய அரசியல் நிலைமை மிக மோசமாக போய்க்கொண்டிருக்கிறது.

இந்தியாவின் **35 மாநிலங்களில்** காங்கிரஸ் கட்சி ஆண்டுகொண்டிருந்த **கோவா** மாநில MLAக்களுக்கும் பெருத்த தொகை கொடுத்து அந்த MLAக்களை BJP கட்சி விலை கொடுத்து வாங்கிவிட்டார்கள்.

இன்று **கோவாவும் காவி கட்சி கையில்** சேர்ந்துவிட்டது.

அடுத்த குறி Miss **மம்தா பௌனர்ஜி** ஆளும் **மேற்கு வங்காளத்தில்** BJP கட்சி ஆட்சியில் அமர **MLAக்கள் விலைபேசப்பட்டு** BJP யுடன் இணைந்துகொண்டிருக்கிறார்கள். மத்திய பிரதேசத்திலும் BJPக்களை BJPக்கு மாற்ற ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறத. அடுத்து **தமிழ்நாடு,** பாண்டிச்சேரி, **கேரளா** ஆகிய மாநிலங்கள் BJP ஆட்சிக்குள் வந்துவிட்டால் ஒரே **மதம்,** ஒரே **மொழி,** இந்தியா முழுவதும் **பொதுச் சட்டம்,** என்ற சட்டத்ததை கொண்டுவந்து விடுவார்கள். **இந்துத்வா** என்ற இந்துமத கொள்கை இந்தியா முழுவதும் திணிக்கப்படும். ஒவ்வொரு **மதத்துக்கும்** உள்ள சட்டங்கள், **கலாச்சாரங்கள்** அவரவர்களுடைய இஷ்ட தெய்வங்கள் யாவும் தூக்கி எரியப்பட்டு **இந்துத்துவ** கொள்கையை இந்தியா முழுவதற்கும் **சட்டமாக கொண்டு வருவது** எளிது என்பது காவி கட்சியின் தவறான கருத்து. இதற்காக திரு. **அமித்ஷா**, திரு. **மோடி** அவர்கள் இரகசிய திட்டமிட்டு தீவரமாக செயல்பட முயலுவதாக

அறியப்படுகிறது.

**தமிழ்நாட்டு** அரசாங்கம் ஒரு கொத்தடிமைபோல செயல்படுவதால் எந்த நேரத்திலும் **BJPயுடன் இணைய வாய்ப்புண்டு.**

ஆனால் தமிழ்நாட்டில் DMK கட்சி இருக்கும் வரை **BJP முயற்சி வெற்றிபெறாது** என்று கூறலாம். அப்படியே **கேரளா மாநிலத்தில்** கம்யூனிஸ்ட் **ஆட்சி இருந்தாலும்,** காங்கிரஸ் ஆட்சி இருந்தாலும் கேரள மக்கள் வித்தியாசமானவர்கள் ஆனதால் கேரளத்தில் **BJP காவி கட்சி கால் வைக்க இயலாது. கேரளா மக்கள் பெரும்பாலானவர்கள் இந்து மதத்தினராக இருந்தாலும் அவர்கள்** BJP **ஆட்சியை விரும்புவதில்லை.**

சரி. காரியத்தின் கடை தொகைக்கு வருவோம்.

☐ **ஜான்சி** ரயில் நிலையத்தை ரயில் கடக்கும்போது ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் உள்ள வயதானவர் தூக்க கலகத்தில் வாய் அகலமாய் திறந்து கொட்டாய் விட்டபோது வழக்கமாக **ஏசப்பா** என்ற அவரின் சப்தம்கேட்ட உடன் அந்த ரயிலில் பயணித்த இந்து முன்னணியினர் **ஜெய்ஸ்ரீராம் போலோ** எனறு அவரை கட்டாயப்படுத்தி **ஜெயஸ்ரீ**ராம் என்று சொல்ல வைத்துவிட்டனர் என்பதை கூறினேன்?

ஆனால் இதே மாதிரி ஒரு சூழ்நிலை ஜாமக்காரன் வாசகர்களாகிய உங்களுக்கு ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்? இதே கேள்வியை Dr.புஷ்பராஜ் ஆகிய நானே என்னை கேட்டுக் கொண்டேன். நான் என்ன செய்திருப்பேன்? ஒரு வேளை என் குடும்பத்திலுள்ளவர்கள் அல்லது உறவினர்கள் இப்படி கூறலாம், பிரச்சனை அதிகமாகாமல் இருக்கவும் உயிர் பிழைக்கவும் ஜெயஸ்ரீராம் என்று **சொல்லி தொலைத்தால் என்ன?** நம் மனதில்தான் இயேசு இருக்கிறாரே! என்று கூறி நான் அடி வாங்காமல் தப்பித்து வீடு வந்து சேர ஆலோசனை கொடுத்திருக்கலாம். ஆனால் என் விசுவாசம் அந்த சூழ்நிலையில் எப்படி இருக்கும்?

அந்த முஸ்லீம் வாலிபன் கைகளை கட்டி வைத்து தடியாலும், காலாலும் அடித்து துன்புறுத்தியும் அல்லா அல்லா என்று கூறி ஆஸ்பத்திரியில் உயிரை விட்டான். பம்பாய் டாக்ஸி டிரைவரும் **ஜெய் ஸ்ரீராம்** சொல்லாமல் பலத்த அடிவாங்கி விழுந்தான்.

**அல்லா** பற்றிய சரியாக அறியாத இவர்களுக்கு அவ்வளவு வைராக்கியம் இருக்கும்போது **கிறிஸ்தவர்களாகிய** நாம் அந்த சூழ்நிலையில் எப்படி செயல்பட்டிருப்போம் என்பதை இப்போதே கற்பனையில் பயிற்சி செய்துகொள்ளுங்கள்.

**சாத்தராக், ஆபேத்நேகோவை நெருப்பு சூளையில்** தூக்கி வீசப்படும்போது நீங்கள் ஒன்றும் கூற வேண்டாம். இராஜா ஆராதிக்கும் அந்த **விக்கிகரத்தை** வணங்கி ஒரு பிடி சாம்பிராணியை போட்டுவிட்டு புகை உண்டாக்கினால் போதும் என்று கூறும்போது. அவ்வளவுதானே சாம்பிராணி மட்டும் போட்டு விடுகிறேன் என்று அந்த வாலிபர்கள் கூற வில்லையே! ஆனால் இரண்டு விதமான விசுவாச வார்த்தைகளை அவர்கள் கூறினார்கள். நாங்கள் ஆராதிக்கும் உயிருள்ள தெய்வம் எங்களை இந்த நெருப்பு சூளையில் **விழாமல்** எங்களை காக்க வல்லவர் என்றார்கள். அதோடு மட்டும் நில்லாமல் ஒரு வேளை எங்கள் தெய்வம் இந்த சூழ்நிலையிலிருந்து எங்களை **விடுவிக்காமல் போனாலும்** பரவாயில்லை என்று கூறி

தங்களை மரணத்திற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டார்களே! அதுதான் **பூரண விசுவாசம்** என்பதாகும்.

பிரச்சனை என்ன? விக்கிரகத்திற்குமுன் வணங்கவேண்டும் அவ்வளவுதானே. வணங்கியபின் பிரச்சனையில்லாமல் சுகமாக வாழலாமே என்று அவர்கள் நினைக்கவில்லை. ஆனால் அவர்கள் தங்களை தப்பிவிக்கும் அந்த சிறிய காரியத்துக்கு இணங்காமல் தாங்கள் **ஆராதிக்கும் தெய்வம்** உயிருள்ளவர். அவர் நம்மை கவனிக்கிறார். இப்படிப்பட்ட நெருக்கத்தில் என் பிள்ளைகள் எப்படி என்னை மகிமைப்படுத்தபோகிறார்கள்? என்பதை அறிய கர்த்தர் விரும்புகிறார்கள் என்று அறிந்திருந்தார்கள். இந்த சூழ்நிலையில் கர்த்தர் மௌனமாக அவர்களை பார்த்துக்கொண்டே இருந்தார்.

அவர்களின் **வைராக்கியமான பதிலை** கர்த்தர் கேட்டவுடன் என் பிள்ளைகள் என்னை **வெட்கப்படுத்தவில்லை!** தைரியமாக மரணத்தை எதிர்கொண்டார்கள் என்று அறிந்தபோது **நெருப்பு** சூளையில் இவர்கள் வீசி ஏறியப்படும்போது அவர்களோடு தானும் சேர்ந்து அந்த நெருப்புக்குள் குதிக்கிறார். எதற்காக? தங்கள் தெய்வ வைராக்கியத்தை விட்டுக்கொடுக்காமல் **பிசாசையும்** அவன் திட்டத்தையும் **தோற்கடித்தார்களே!** அந்த வைராக்கியத்தை பாராட்டி அந்த மூவரையும் சுற்றி அவர்களின் தலைமுடிகூட கருகாமல் அக்கினியின்சூடு அவர்களின் சரீரத்தை வேதனைப்படுத்தாமல் ஒரு கைக்குழந்தையை பாதுகாப்பதுபோல கர்த்தர் பாதுகாத்தாரே! **எத்தனை அற்புதம் !** இவர்களை தீ சூளையில் போட்டவர்கள் எல்லாம் தீ சூலையின் அனல் தாக்கி அங்கேயே மடிந்து போனார்களே! கர்த்தர் அவர்களின் சாட்சியுள்ள ஜீவியத்தையும், வைராக்கியத்தையும் கணப்படுத்தினார்.

அடுத்து நடந்த நிகழ்ச்சிதான் மிகவும் அற்புதமான, உலகம் போற்றும் **உலக சரித்திரத்தில் எழுதப்பட்ட** நிகழ்ச்சியாகும்!

மறுநாள் நெருப்பு சூளையில் அருகில் **ராஜா** நின்று குனிந்து பார்க்க வசதியாக தீசூளையின் சுற்று சுவர் சூட்டை இரவெல்லாம் தண்ணீர் ஊற்றி, சூட்டை தனித்து தயாராக வைத்திருந்தார்கள். ராஜா வந்து குனிந்து பார்த்தார், என்ன ஆச்சரியம். தீயிலிட்டவர்கள் மூன்று பேர். ஆனால் அங்கு **நான்காவது** நபர் ஒருவர். தீசூளைக்குள்ளே தன்பிள்ளைகள் மேல் அனல் பாதிக்காதிருக்க சுற்றி சுற்றி வருகிறார் என்ன ஆச்சரியம் !

ராஜா சத்தமாக கூவி சூளையில் வீசி எறிந்த அந்த மூன்று வாலிபரை விசாரிக்கிறார். தீ சூளையில வீசும் போது நீங்கள் சவால் விட்டீர்களே அதன்பின்படி உங்கள் தேவன் உங்களை காப்பாற்றினாரா? என்ற கேட்க ! ஆம் ராஜாவே ! அவரும் எங்களை பாதுகாக்க நெருப்பு சூலையில் எங்களோடு நிற்கிறார். கர்த்தருக்கே மகிமை.! இப்போது தான் ஒரு பெரும் அதிசயம் நடக்கிறது. பல வருடங்கள் ஊழியம் செய்து நாடு முழுவதும் அறிவிக்கும் ஊழிய வேலையை இந்த **ராஜா** சுலபமாக்கி **மிகுந்த சத்தத்தோடு** இந்த வாலிபர்கள் **ஆராதிக்கும் தெய்வமே** உண்மையான தெய்வம். இனி நாடு முழவதும் **விக்கிரகங்கள்** இருக்கக்கூடாது. இனி **இவர்கள் தெய்வம்தான்** நம் தெய்வம் **ராஜாவாகிய நானும்** என் நாட்டு மக்களும் **இந்த தெய்வத்தை** மட்டும்தான் ஆராதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். பாருங்கள்! அந்த

ஒரு கட்டளை தேசம் முழுவதும் விக்கிரக ஆராதனையை நீக்கி **யெகோவாவை** தெய்வமாய் ஆராதிக்கிறார்கள். இதை வாசிக்கும் என்அருமையான வாசகர்களே! இப்படிப்பட்ட சூழ்நிலை உங்களுக்கு உண்டாகுமானால் அந்த முஸ்லீம் வாலிபனை கட்டிப்போட்டு அடித்து சாகடித்தார்களே! அடிபடும் அந்த சூழ்நிலையிலும் அவன், **தான் ஆராதித்த** தெய்வத்தின் பெயரை அல்லாமல் **ஜெய் ஸ்ரீராம்** என்று எந்த விக்கிரகத்தையும் வாழ்த்தவில்லையே? அல்லா! அல்லா!! என்றே கூறி உயிர் விட்டானே !

பல முறை வட இந்திய ஊழியம் பயணம் செய்யும் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருந்தால் நான் என்ன செய்திருப்பேன் ? **ஜான்ஸி** ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வண்டி புறப்பட்டவுடன் தூக்க கலக்கத்தில் **இயேசப்பா** என்று கொட்டாய் விட்டாரே அவர் வயதானவர் என்று கூட பார்க்காமல் அவரை சுற்றி நின்று **ஜெய்ஸ்ரீராம்** சொல்லு என்று கட்டாயப்படுத்தும்போது சுற்றியிருந்த அவரின் வயது முதிர்ந்த **மனைவி** பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் அவர்கள் கத்தோலிக்க சபையை சேர்ந்தவர்களோ, பெந்தேகோஸ்தேயோ அல்லது CSI சபையை சார்ந்தவர்களோ தெரியாது. ஆனால் அந்த வயதானவர் ஓரளவு ஜெய்ஸ்ரீராம் என்று கூற முடியாது என்று வைராக்கியமாய் கூறி பார்த்தார். ஆனால் **அடிவிழும்** நமக்கெதற்கு வம்பு என்று மனைவி, பிள்ளைகள் எல்லாரும் அவரிடம் ஜெய்ஸ்ரீராம் சொல்லிவிடுங்கள் என்று வற்புறுத்த அவர் கண்ணீர்மல்க மெதுவாக **ஜெய்ஸ்ரீராம்** என்றார். சத்தமாக கூறு என்றனர். அதற்கு அவர் கீழ்படியாமல் மெல்லிய சத்தத்தில் **ஜெயஸ்ரீராம்** என்றார். அதன்பின் அவரை விட்டுவிட்டு போய்விட்டனர். அந்த வயதானவர் நிலைபோல பலர் வேறு வழியில்லாமல் தங்கள் குடும்ப பாதுகாப்புக்காக இயேசுமேல் வைராக்கியம் காட்ட முடியாமல் விக்கிரகத்தை வணங்கிவிடுகின்றனர்.

## இந்து மத தீவிரவாதிகள்

BJP ஆட்சிக்கு வந்தவுடன் இந்து தெய்வ பாதுகாப்பாளர் என்ற இயக்கத்தினர் அவிழ்த்து விட்ட நாய்களைபோல பஸ் ஸ்டாண்ட், கடைவீதிகள், ரயில்வே ஸ்டேஷன்களில் கூடி நிற்கும் மக்களை ஜெய்ஸ்ரீராம் என்று சொல்லும்படி மக்களை கட்டாயப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். என்ன அராஜகம் இது?

கர்த்தர் சபை மக்களை பார்த்து சொல்லுகிறார். உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். உனக்கு **கொஞ்சம் பெலம்** (விசுவாசம்) இருந்தும் நீ என் **நாமத்தை மறுதலியாமல்** என் வசனத்தை கைகொண்டபடியால் இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டான் என்கிறார். வெளி 3:8. அந்த குறிப்பிட்ட ஆசீர்வாதத்தைக் கர்த்தர் கூறுவதற்குமுன் அவர் எச்சரித்தது என்ன? கவணியுங்கள்.

நீ **படப்போகிற பாடுகளை** குறித்து எவ்வளவும் பயப்படாதே ! இதோ நீங்கள் **சோதிக்கும்படியாய்** பிசாசானவன் உங்களில் சிலரை **காவலில் போடுவான்.** 10 நாட்கள் பலவிதமாக உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ **மரணபரியந்தம் உண்மையாக** இரு, அப்பொழுது **ஜீவ கிரீடத்தை** உனக்கு தருவேன். வெளி 2:10

இதை எழுதும்போது என்னைப்பற்றியும் நான் யோசிக்கிறேன். **அரேபியா** நாடுகளில் உள்ள எல்லா தேசங்களுக்கும் கர்த்தருடைய வசனம் கூற பலமுறை நான் போய் வந்தேன். ஆனால் அரேபியாவில் ஒரே இடத்துக்கு மட்டும் இதுவரை போகமுடியவில்லை, அது **சவுதி அரேபியா என்ற நாடாகும்.** 1974ம் ஆண்டிலிருந்து சவுதியில் வேலை பார்க்கும் டாக்டர்கள், இந்திய அரசாங்க கிறிஸ்தவ உயர் அதிகாரிகள் அங்குள்ள ஷேக்குகள் சிபாரிசுடன் எனக்கு விசா எடுக்க பல முறை முயன்றார்கள். சாதாரண **விசிடிங் விசா.** நண்பர்களை சந்தித்தல் **கம்பெனி விருந்தாளி** இப்படி பல தலைப்புகளில் என் விசாவுக்காக பலமுறை என் பெயரில் விண்ணப்பித்தார்கள். ஆனால் எப்போது என் **பெயரை** கம்ப்யூட்டரில் பதிவு செய்தாலும் உடனே வருகிற பதில் என்ன தெரியுமா? இவர் (Christian Fenatic) அதாவது இவர் ஒரு **கிறிஸ்தவ தீவிரவாதி** என பதிவு செய்துவிட்டிருக்கிறார்கள். யார் இதை மாற்றுவார்? இந்த கிறிஸ்தவ தீவிரவாதி என்ற பெயரோடு வேறு குறுக்கு வழியில் சவுதி நாட்டுக்கு உள்ளே சென்றுவிட்டால் என்னை உயிரோடு விட மாட்டார்கள்!

அதைப்போலவே இந்தியாவில் RSS இயக்கத்தினர் என்னை போல் கிறிஸ்தவ ஊழியர்கள பலருடைய பெயர்களை தங்கள் கம்ப்யூட்டரில் பதிவு செய்துள்ளார்கள். டாக்டர் புஷ்பராஜ் இந்து மதத்தின் எதிராளி இவர் பயங்கரவாதி என்றெல்லாம் எழுதி வைத்துள்ளார்கள். நான் என் மனந்திரும்பின நாள்முதல் நான் செய்த ஊழியத்தைப்பற்றியும் இப்போது நடத்திக்கொண்டிருக்கும் **ஜாமக்காரன் பத்திரிகை ஊழியத்தைப்பற்றியும்** அதில் அவர்கள் குறித்து வைத்துள்ளார்கள் என்பதை நான் அறிந்தேன். தேவனை துதித்தேன்.

இப்படி என்னை மட்டும் அவர்கள் குறித்து வைக்கவில்லை. FMPB, IEM, விஷ்வவானி போன்ற பல உண்மையான மிஷனரி ஸ்தாபனங்களைப்பற்றியும், அந்தந்த ஸ்தாபனத்தில் மொத்தம் எத்தனை **மிஷனரிகள்** எங்கெங்கிருந்து ஊழியம் செய்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் பல வருடங்களுக்கு முன்பே சேகரித்து வைத்திருக்கின்றனர். அதனால்தான் FMPB முன்பெல்லாம் வருடாந்திர காலாண்டர்களில் மிஷனரி **பணித்தளங்கள்** இந்தியாவில் எங்கெங்கு உண்டோ அங்கு ஊழியம் செய்யும் **ஊழியர்கள்** பெயர் எண்ணிக்கை அகிய யாவும் யாவையும் அச்சிட்டு ஜெப குழுக்களுக்கும் ஊழியத்தை தாங்குபவர்களும் கொடுப்பார்கள். ஆனால் இப்போதெல்லாம் மிஷனரி ஊழிய விவரங்கள் எதவும் RSSன் பார்வையில் படாமலிருக்க பணிதளங்கள் எதையும் காலாண்டரில் குறிப்பிடாமல் வெரும் காலண்டர் மட்டும் அச்சடித்து இப்போது வெளியிடுகிறார்கள்.

□ வட இந்தியாவில் நான் இப்படிப்பட்ட சூழ்நிலையில் RSS தீவிரவாதிகள் கையில் அகப்பட்டால் அவர்கள் என்னை ஜெய் ஸ்ரீராம் என்று கூற கட்டாயப்படுத்தினால் ஜெயஸ்ரீராம் என்று நான் கூறாமல் **ஈஸாமஸிக்கு ஜே** என்று நான் கூறுவேன். என் தெய்வம் என்கூட உண்டு. எல்லா ஆபத்துக்கும் **மரண உபத்திரவத்துக்கும்** என்னை நான் **தயாராக்கிக்கொண்டுதான்** என் பிரயாணங்களை தொடருகிறேன். இதில்கூட நான் வெற்றி பெற்று என் தேவனுக்கு பெருமை சேர்ப்பேன். எந்த அடி உதைகளும் வாங்க நான் தயார். இது நான் ஊழியத்தில் கால் பதித்த போதே எடுத்த தீர்மானமாகும்.

## ஒரு சில கிறிஸ்தவ சபை தலைவர்கள் என் மேல் காட்டும் கோபம்

ஆனால் நம் கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் இருக்கிறார்களே. ஒரு சில பிஷப்மார் குறிப்பாக இப்போதுள்ள **CSI மாடரேட்டர்** இவர்களின் கோபத்துக்கும் எரிச்சலுக்கும் வெறுப்புக்கும் ஆளாகி **Dr. புஷ்பராஜ்** ஆகிய எனக்கு அப்படிப்பட்டவர்களால் ஏற்படுகிற எதிர்ப்புகளும, **தடைகளும்** இருக்கிறதே! அது என் **சரீரத்தை** வேதனை படுத்துவதில்லை. என் **மனதை** மிகவும் வேதனைப்படுத்துகிறது. நான் **பணத்துக்காகவோ, பண சேகரிப்புக்காகவோ** எந்த இடத்திலும் **எந்த நாட்டிலும்** சென்று பிரசங்கிப்பதில்லை. அதன் அவசியமும் எனக்கில்லை. காரணம், என் பிள்ளைகள் நல்ல நிலையில் இருக்கிறார்கள். நானும் என் மனைவியும் நல்ல நிலையில் சுகத்தோடும் ஆரோக்கியத்தோடும் **கடன் இல்லா** வாழ்க்கையில் சந்தோஷமாக வாழ்கிறோம். மாதா மாதம் அல்லது அடிக்கடி ஜாமக்காரன் அச்சடி செலவுக்காகவும் ஸ்டாம்ப் செலவுக்காகவும் ஏராளமான வாசகர்கள் மாதம் தோறும் நிறுத்தாமல் காணிக்கை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வாசகர்கள் அனுப்பும் பணமே எங்களுக்கு போதுமானதாக இருக்கிறது. என் மனைவியின் பென்ஷன் எங்கள் இருவருக்கும் போதுமானது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஆனால் என் பத்திரிகையான **ஜாமக்காரனில்** ஒரு **சில பிஷப்மார்கள் செய்யும்** அட்டூழியங்கள் **சில பிஷப்மார் கூறும் அந்தி கிறிஸ்துவின் உபதேசம்** இவைகளை நான் சுட்டிக்காட்டி நான் வெளியிடுவது கிறிஸ்தவ மக்களுக்கு இவர்களின் ஊழல்களை **வெளிப்படுத்துவதும்** இவர்களுக்கு என் மேல் பெரும் எரிச்சலையும், **வெறுப்பையும்** உண்டாக்கி சபைகளில் **ஊழியம் செய்யவிடாமல் மறைமுகமாக** தடைகளை உண்டாக்கி வருவது **இந்து முன்னணியினரின் தாக்குதலைவிட** மோசமாக இருக்கிறது என்றாலும் உண்மையான **பக்தியுள்ள பிஷப்மார்** ஊழலில் **சிக்காத பிஷப்மார்கள் ஆயர்கள்** மட்டும் இன்னும் என்னை தொடர்ந்து உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக தெய்வத்தை துதிக்கிறேன்.

**நெபுக்காத் நேசார்** என்ற ராஜா கூறியதைபோல அந்த வாலிபர்களின் ஆவிக்குறிய **வைராக்கியத்தையும்** மரணத்தின் வாசல் வரை சென்றும் **தான் நம்புகிற தெய்வத்தை** அவர்கள் தெளிவாக அறிந்ததினால் அல்லவா **கர்த்தரை** தவிர வேறு எந்த விக்கிரகத்திற்கும் தலை வணங்காது எதிர்த்து நின்ற அவர்களின் **தெய்வ நம்பிக்கை** விசுவாசத்தின் சாட்சி தான். ராஜா தன் வாயால் இந்த வாலிபர்கள் ஆராதிக்கும் **தெய்வமே உண்மையான தெய்வம்** என்று ராஜாவின் வாய் மொழி மூலமாக தேசம் எங்கும் அறிவித்தான்.

**நம் ஜீவியம்,** நம் உடை, **நம் பேச்சு,** நம் வீட்டில் அல்லது வேலை செய்யும் ஸ்தலத்தில் பேசும் பேச்சு, நம் **நடவடிக்கைகள்** மூலமாக நம்மை காண்போர் இவர்களின் தெய்வமாகிய **இயேசு கிறிஸ்துதான்** உண்மையான தெய்வம் என்று கூற வேண்டும்.

☐ நம் **இந்தியாவில்** இன்னும் என்னனென்ன நடக்குமோ தெரியவில்லை. இப்போதுள்ள BJP அரசாங்கத்தில் ஜெய ஸ்ரீராம் என்று **சொல்லாதவர்கள் தாக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள்.** ஆனால் **அந்தி கிறிஸ்துவின்** காலத்தில் 666 நெம்பர் இடாதவர்களுக்கு **ரேஷன்** கிடைக்காது. **குழந்தைகளுக்கு** பால் கிடைக்காது. அல்லது 666 நெம்பர் இடாதவர் **ஜெயிலுக்கு** அனுப்பப்படுவார்கள் என்றால் அந்த சூழ்நிலையில் நம் செயல்,

விசுவாசம், வைராக்கியம் எப்படி இருக்கும்? என்று கற்பனை செய்து பாருங்கள். கர்த்தர்தாமே நம் ஒவ்வொருவரையும் இந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்து முன்னணியினர் கொடுக்கும் **இப்போதுள்ள நெருக்கத்திலேயே** தெய்வம் நமக்கு **பயிற்சி கொடுத்து** பக்குவப்படுத்தி, தைரியப்படுத்தி தயார்படுத்துவாராக! அந்த காலத்தில் **இரத்த சாட்சிகளாய்** மரித்தவர்கள் எப்படி குடும்பத்தை கர்த்தருக்காக **இழக்க தயாரானார்களோ** அந்த தைரியம் நம் ஒவ்வொருவருக்கும் உண்டாயிருக்க வேண்டும். குறிப்பாக பல இந்திய **மாநிலங்கள்** கிராமங்கள், ஆதிவாசிகளுக்கு **சுவிசேஷம் அறிவிக்க** செல்லும் எனக்கு நெருப்பு சூளை அனுபவத்தில் **சாட்சியை காத்துக்கொண்ட** அந்த வாலிபர்களின் **தைரியம்** எனக்கும் கர்த்தர் அருள்வாராக.

☐ **காணிக்கை** அனுப்பிய எல்லா வாசகர்களுக்கும் நன்றி கூறிகிறேன். நீங்கள் NEFT, Online வங்கி வழியாக அனுப்பிய அனைத்து காணிக்கைகளும் கிடைத்தது. மிக்க நன்றி. **உடனுக்குடன்** பணம் கிடைத்த விபரத்தை கடிதம் மூலம் உங்களுக்கு அனுப்ப இயலவில்லை. நேரம் கிடைக்கும் போதெல்லாம் நானே என் கையாலேயே கொஞ்ஜம் கொஞ்ஜமாக பதில் எழுதி அனுப்புகிறேன். e-mail மூலமாகவும் பதில் அனுப்புகிறேன். தொலைபேசி அல்லது கைபேசி எண்ணை குறிப்பிட்டு அறிவித்தவர்களுக்கு தொலைபேசி வழியாகவே நானே உங்களுடன் பேசி பணம் கிடைத்த விவரத்தை கூறி உங்களுக்காக போனிலேயே ஜெபம் செய்துவிடுகிறேன். என் கைபேசி எண்ணில் 9894661333 SMS செய்பவர்களுக்கு நீங்கள் SMSல் குறிப்பிட்ட கைபேசி நெம்பரை குறித்து எழுதிவைத்துக்கொண்டு வெளியூரில் இருந்தாலும் அங்கிருந்தபடியே போனில் பேசி பணம் கிடைத்த விவரத்தை அறிவிக்கிறேன். **கர்த்தரின் பணியில்** உங்களை என்னோடு இணைத்து **என் ஊழியத்திலும்** உங்களை பங்குகொள்ள வைத்த கர்த்தருக்கு கோடானுகோடி ஸ்தோத்திரம்.

கர்த்தரின் பணியில்

டாக்டா **புஷ்பராஜ்**

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



சகோதரி **கிரேஸ்**

ஜாமக்காரன் பத்திரிகையின் நீண்ட கால வாசகர் குடும்பமும் பல ஆண்டுகள் நாங்கள் குடும்பமாய் நேசிக்கும் சகோ. ஜான் தன்ராஜ் அவர்களின் மனைவியான **சகோ. கிரேஸ்** அவர்கள் தன்னுடைய 82ம் வயதில் ஜுலை மாதம் 2019 கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். ஏராளமான ஊழியர்களை, மிஷனரிகளை தாங்கும் ஊழியபாரம் உள்ள குடும்பம். இவர்களின் 4 பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் நல்ல ஆவிக்குரியவர்களாக வளர்த்திய நல்ல சாட்சியுள்ள சகோதரி கிரேஸ் அவர்களின் மரணத்தால் வாடும் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவருக்கும் கர்த்தர் தாமே ஆறுதலை அருள்வாராக.

மூத்த மகன் ஜான் மணிமாறன் அவர்கள் பல வருடங்களாக வியாபாரத்தையும் கவனித்து மூன்று தங்கைகளின் திருமணத்தையும் நடத்தி வைத்த பொறுப்புள்ள மகனாகவும் ஆவிக்குரிய தெய்வ பக்தி உள்ளவராகவும் இருப்பதை குறித்து நான் தெய்வத்தை துதிக்கிறேன்.

# கேள்வி ? பதில்...

## இவர்களின் வியாதியும் - மரணமும்

## தெய்வ தண்டனையா ! தெய்வம் அனுமதித்ததா?

**கேள்வி :** **தெய்வ வேலைக்காரர்கள்** குறிப்பாக **சபை தலைவர்கள்** வியாதி படுக்கையில் வீழ்ந்தால் அல்லது விபத்தில் அகப்பட்டால் அது **பாவத்தினால்** உண்டான தண்டனையா? அல்லது கர்த்தரால் **அனுமதிக்கப்பட்டதா?**

**பதில் :** இந்த கேள்வி என்னை பயங்கரமான பிரச்சனையில் அகப்படுத்தும் கேள்வியாகும். உங்கள் கடிதத்தில் குறிப்பிட்ட சபை தலைவர் ஒருவரை பற்றி சில விஷயங்களை எழுதியதால் உங்கள் கேள்வி **பிஷப்மார்களை**ப்பற்றிதான் குறிப்பிடுகிறது என்பது தெளிவாக விளங்குகிறது. இதற்கு நான் எழுதும் பதில் சிலர் (Blackmail) பிஷப்மாரை நான் பயமுறுத்துவதற்காக எழுதினேன் என்றும் நினைக்கலாம் அல்லது பழிவாங்க அல்லது அவமானப்படுத்த எழுதினேன் என்றும் உங்களில் பலர் நினைக்கலாம். நீங்கள் என்ன நினைத்தாலும் என் பதில் வேத வசனத்தை சார்ந்ததாகவே இருக்கும். என் சொந்த கற்பனை அல்ல. யாரையும் **அவமானப்படுத்த அல்ல** என்பது எனக்கும் இதை எழுதவைக்கும் **என் தேவனுக்கும்** தெரியும். யார் வெறுத்தாலும், யார் கோபப்பட்டாலும் நான் கவலைப்பட மாட்டேன். பயப்படவும் மாட்டேன்.


☐ உங்கள் கேள்விக்கு பதில் நீங்கள் குறிப்பிட்ட தெய்வ **ஊழியர்கள்** குறிப்பாக **சபை தலைவர்கள், பிஷப், மாடரேட்டர்** போன்றவர்கள் மனந்திரும்பி **இரட்சிப்பின் அனுபவம்** உள்ளவர்களானால் அப்படியே அவர்கள் நம் **வேத வசனத்தின்படி** ஊழியம் செய்பவர்களானால் அவர்களுக்கு வந்த **வியாதி** அல்லது **விபத்து தண்டனையாக** கொடுக்கப்பட்டது அல்ல. அது **தெய்வத்தால் அனுமதிக்கப்பட்டது.** (லூக்கா 22:3. புலா 3:33) அப்படிப்பட்டவர்களுக்கு அந்த **வியாதி** விசுவாசத்தை பெலப்படுத்தும். ஆவிக்குறிய **சமாதானத்தையும்** கொடுத்து அந்த வியாதி படுக்கையில் **தெய்வத்தை துதிக்க** துதிக்க செய்யும். ஜெயிலுக்குள் **ஸ்தோத்திர பாட்டை** பாடிய **பவுலும் சிலாவும்போல** தெய்வத்தை **துதிக்கச்செய்யும்** இப்படிப்பட்டவர்கள் முனுமுனுக்க மாட்டார்கள்.

☐ அடுத்த முக்கியமான விஷயம் நீங்கள் கேள்வியில் குறிப்பிட்ட **ஊழியர்கள்** கிறிஸ்தவ விசுவாசிகள் அல்லது **பிஷப்மார், மாடரேட்டர்** போன்ற ஊழியத்தில் **உயர் பதவியில்** உள்ளவர்கள் **மனந்திரும்பாத அனுபவம்** உள்ளவர்களாக **இரட்சிக்கப்படாதவர்களாக** இருந்தால் அல்லது **வசனத்தின் படி** ஊழியம் செய்யாமல் **வசனத்துக்கு விரோதமாக** கர்த்தரின்

வசனங்களுக்கு தங்கள் **சொந்த வியாக்கியானங்களை** கொடுத்து **தானும் கெட்டு** சபை மக்களையும் கெடுக்கிறவர்களாக இருந்தால் அல்லது பிஷப்மார், பாஸ்டர்கள் தவறான **நவீன உபதேசத்தை** வேத வசனத்துக்கு விரோதமாகவும் **அந்திகிறிஸ்துவின்** வஞ்சகமான திட்டமான **ஒரே சபை** என்ற பெயரில் **விக்கிரக ஆராதனை** செய்யும் கிறிஸ்தவ சபையோடும் மரித்த **பரிசுத்தவான்களோடும்** மரித்த மரியாலோடு ஜெபிக்கும் கத்தோலிக்க சபைகளையும் மற்ற தவறான உபதேசங்களை கொண்ட சபைகளையும் கூட்டிசேர்க்கும் **ஒரே சபை** என்ற **பிசாசின் திட்டத்திற்கும்,** எல்லா **தெய்வங்களும் ஒன்று - எல்லா மதமும்** ஒன்று என்ற வசனத்துக்கு எதிரான உபதேசங்களை கிறிஸ்துவ சபைக்குள் கொண்டுவர முயற்சிக்கும் எந்த **மாடரேட்டரும், பிஷப்பும், எந்த ஆயரும், பாஸ்டரும்** இவர்களின் யார் **வியாதி படுக்கையில்** விழுந்து கிடக்கிறார்களோ அல்லது **விபத்தோ** இவர்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் **மரித்தாலோ** அது **தெய்வ கோபத்தால்** அவர்களுக்கு அல்லது அவர்கள் **குடும்பத்துக்கு வந்த தண்டனையாகும்.**

## அறிந்திருந்து தவறு செய்கிறவன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்.

**உசியா** ராஜா தேவாலயத்தில் தூப கலசம் எடுத்து காட்டும்போது **ஆசாரியர்கள்** எச்சரித்தார்கள். **நியாய பிரமான சட்டம்** ராஜாவுக்கு தெரியும் என்றாலும். **கர்த்தருக்கு ஊழியம் செய்கிறேன்** என்ற ஆசையில் **தன் தகுதியைப்பற்றி** யோசிக்காமல் **கர்த்தரின் சட்ட திட்டங்களைப்பற்றி** யோசிக்காமல் தூப கலசத்தை தேவ சன்னதியில் காட்ட தொடங்கினான். அதே இடத்தில் இராஜாவின் நெற்றியில் குஷ்டம் வந்தது. நியாய பிரமான சட்டப்படி லேவி 13ம் அதிகாரத்தில் எழுதியதுபடி குஷ்டம் வந்தால் முதலில் **ஆசாரியன்** பார்க்கவேண்டும். வெளியரங்கமாக குஷ்டம் **ராஜாவின் நெற்றியில் ஆசாரியன் காணதக்கதாக** தெரிந்தது. சட்டப்படி அவன் **அரண்மனைக்கு போகாமல் பாளயத்துக்கு புறம்பே தள்ளப்பட்டான்.** ராஜா **விபச்சாரம்** செய்ததாக எழுதப்படவில்லை. ஆனால் **தகுதியில்லாமல்** தேவ சன்னதியில் **ஊழியம்** செய்தது கர்த்தருக்கு பிடிக்கவில்லை. தேவ கோபம் ராஜாவின்மேல் வந்தது.



பிஷப் சாமுவேல் அமிர்தம்

## கடந்த காலங்களில் ஊழியர்கள் பிஷப்மார்கள் மாடரேட்டர் ஆகியவர்களுக்கு ஏற்பட்ட வியாதி மரணம்

**CSI மார்தோமா, லூத்ரன்** சபைகளின் பிஷப்மார் **மாடரேட்டார்** ஆகியவர்களின் கடந்த கால சம்பவங்களை கவணித்தால் நான் எழுதுவதின் உண்மை நிலையை உணருவார்கள்.

**பிஷப் சாமுவேல் அமிர்தம்** அவர்கள் நல்ல வேத ஆராய்ச்சியாளர். ஏழைக் குடும்பங்களின் நல்வாழ்விற்காக உதவுபவர். இப்படிப்பட்ட நல் குணங்கள் இருந்தாலும் கிறிஸ்தவ

**சபை மேய்ப்பர்களை** உருவாக்கும் மதுரை TTC **வேதாகம கல்லூரியில்** எல்லா மதமும் ஒன்று, **எல்லா தெய்வமும்** ஒன்று என்று உபதேசித்தார். **அரசரடி வேதாகம கல்லூரி மதுரை வாசலில் இந்து தெய்வங்களின் சிலைகளை வைத்தார்.** அதைப்பற்றி உபதேசிக்கவும் செய்தார். அவரிடம் படித்தவர் பலர் இன்று CSI, லூத்தரன் சபைகளில் ஆயராக இருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் சாமுவேல் அமித்தம் அவர்களிடம் கற்றதை தானே தங்கள் சபை மக்களுக்கும் பிரசங்கிப்பார்கள். அதனால் சபை மக்கள் கிறிஸ்து மட்டுமே தெய்வம் என்ற உண்மையிலிருந்து சிலர் விலக நேர்ந்தது.

**நானே வழி - நானே சத்தியம் - நானே ஜீவன் - நானே வாசல்** என்ற இயேசுகிறிஸ்து கூறிய சத்தியத்திற்கு விரோதமான இந்த பயங்கர உபதேசம் சபையை குழப்பியது.

## பதவி உயர்வு

**Rev. சாமுவேல் அமிர்தம் அவர்கள் தெற்கு கேரள CSI டையோசிஸ்க்கு பிஷப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.** பிஷப் பதவி ஏற்றவுடன் **ஓணம்** என்ற இந்துமத பண்டிகையை **CSI சபைகளிலும்** கொண்டாடலாம் அது **கேரள கலாச்சார பண்டிகை** என்றார். **சபையில் ஆராதனையில்** வாசிக்கப்படும் **வேத பாடத்தில்** மூன்றாம் பாடமாக கிருஷ்ணன் மகா பாரதத்தில் உபதேசித்த **கீதை** உபதேச புஸ்தகத்திலிருந்து **ஒரு அத்தியாயம்** சபையில் வாசிப்பதில் தவறேதும் இல்லை என்றால் **இயேசு மாத்திரம்** சுகம் அளிக்கிறவர் என்ற **பிடிவாத உபதேசத்திலிருந்து** மாறுங்கள். சாமுவேல் அமிர்தம் ஆகிய நான் **ஆஸ்பத்திரியில் வலியால்** துடித்தபோது என் நண்பன் **சிவ பக்தன்** ஜெபித்துகொடுத்த **விபூதி**தான் என்னை சுகமாக்கிற்று என்றார்.

**தேவ கோபம் இறங்கியது**


குடும்பம் உடைந்தது, பிள்ளைகள் மூலம் மனவேதனை உண்டானது. பிள்ளைகள் கிறிஸ்தவ சாட்சி இழந்தார்கள். பிஷப் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டார். **ஷ்ட்ரோக்** வந்தது, கையும் - காலும் செயலிழந்தது. எழுந்திருக்க முடியாமல் படுக்கையிலேயே உயிர் பிரிந்தது. பிஷப் **சாமுவேல் அமிர்தம் அவர்களுக்கு உண்டான வியாதி - மரணம்** ஆகியவைகள் **கர்த்தரின் தண்டனையா? தேவன் அனுமதித்ததா?**

வடக்கு கேரள CSI டையோசிஸ் பிஷப் **Rt. Rev. Dr. குருவில்லா**

## திருவனந்தபுரம் கன்னமூலா செமினரி முன்னான் பிரின்சிபால்

கன்னமூலா செமினரி **பிரின்ஸ்பாலாக** பணியாற்றிய Rev. Dr. குருவில்லா அவர்கள் ஒரு **துண்டு பிரதியை** அச்சடித்து மாணவர்களுக்கு விநியோகித்தார். அன்று அந்த கல்லூரியில் படித்த வேதாகம கல்லூரி மாணவர்களும் **லெக்சரர்களும்** எனக்கு அந்த துண்டு பிரதிகளை அனுப்பி விளக்கம் கேட்டார்கள்.

இயேசு கிறிஸ்து பாடுபடும்போது **பேதுரு** இயேசுவை மூன்று முறை மறுதலித்தான் சேவலும் கூவியது. அதை டாக்டர் குருவில்லா அவர்கள் அந்த சேவல் சத்தம் **சேவலுடையது அல்ல.** ரோமர்கள் அந்த காலத்தில் உபயோகித்த **ஒரு கருவியிலிருந்து** வந்த சத்தம் என்பதை பல சரித்திர புத்தகங்களிலிருந்து ஆராய்ச்சி செய்து வெளியிட்டேன். **ஆகவே அது சேவல்** கூவிய **சத்தம் அல்ல என்றார்.** அப்படியானால் இயேசு எதற்காக **சேவல் கூவுவதற்கு** முன் நீ



**Rt. Rev. K.P. Kuruvilla**

என்னை மூன்று முறை மறுதலிப்பாய் என்று கூறவேண்டும். அப்படியானால் இயேசு கூறியது பொய் தீர்க்கதரிசனமா? பொய்யான எச்சரிப்பா? இந்த கேள்விகளுக்கு அவரிடம் பதில் இல்லை.


□ இவர் பிஷப்பாய் இருக்கும்போது கல்லூரி, பள்ளி டீச்சர்களின் நியமனத்தில் 85 கோடி வாங்கியதாக ஒரு குற்றச்சாட்டு உண்டானது. விசாரனையும் உண்டானது. இந்த விவரம் நடந்தது இந்தியாவில் உள்ள கேரளாவில் கள்ளிகோட்டை என்ற ஊரில் ஆகும். ஆனால் இதைப்பற்றிய விவரத்தை முதல் வெளியிட்டது. Church of England News Paper. 2011 ஜனவரி 8ம் தேதி பக்கம் நெ. 8ல் வெளியிட்டுள்ளார்கள். அதன்பின்தான் இந்திய செய்தி பத்திரிகையில் செய்திகள் வெளியானது. டையோசிஸிஸ் நடந்த இத்தனை பண ஊழல்களுக்கு முக்கிய காரணம் அன்று டையோசிஸ் மேனேஜர் ஸ்தானத்தில் இருந்த ஒரு ஆயர் ஆகும் அவரை யாரும் கேள்வி கேட்க முடியாது. அவரால்தான் பிஷப் அவர்களுக்கும் கெட்ட பெயர் வந்தது என்றாலும் பண ஊழலில் இவருக்கும் பங்கு இருந்ததாக கூறினார்கள்.

டாக்டர் குருவில்லா அவர்கள் பிஷப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயம் அன்று இரவே எனக்கு எட்டியது. ஏற்கனவே டாக்டர் குருவில்லா அவர்கள் ஆயராக பணியாற்றும்போதே எனக்கு தெரியும். அவரும் அவரின் மனைவியும் என்னை நேசிப்பவர்கள்.

ஆனால் வேத வசனத்துக்கு எதிரான இப்படிப்பட்ட பல உபதேசம் அவரிடம் இருந்தன. பிஷப் பதவி அறிவிப்பு கிடைத்த இரவே பயனப்பட்ட மறுநாள் திருவனந்தபுரம் கன்னிமூலா வேதாகம கல்லூரிக்கு காரில் அதிகாலை நேரம் அவர் வீட்டுக்கு சென்று வாழ்த்துக்கள் கூறி ஜெபித்துவிட்டு என் காரில் ஏறியபோது, ஐயா நீங்கள் பிஷப் பதவி ஏற்றவுடன் இப்படிப்பட்ட நவீன உபதேசங்களை டையோசிஸ் மக்களிடம் அறிமுகப்படுத்திவிடாதீர்கள். ஏற்கனவே விசுவாசத்தில் தடுமாறிக்கொண்டிருக்கும் மக்களை மேலும் குழப்பி கர்த்தரை விட்டு பிரிக்கும் நிலை உண்டாக்கவேண்டாம் என்றேன். அது அவருடைய அறிய ஆராய்ச்சி கண்டுபிடிப்பை நான் அலட்சியப்படுத்தியதுபோல அவருக்கு தோன்றியதால் அந்த நிமிடம் முதல் அவர் என்னை வெறுக்க தொடங்கினார். அதன்பின் பல விஷயங்கள் டையோசிஸில் நடந்தது. **வன அதிகாரிகள்** கண்டுபிடித்த **பல கோடி மதிப்புள்ள** மூனாறு எஸ்டேட் மரங்கள் கேஸில் பிஷப் அகப்பட்டார். பிஷப் அவர்கள் ஜெயில் போகும் நிலை ஏற்பட்டது. பல ஆயர்கள் இவரால் பழிவாங்கப்பட்டார்கள். திடீரென்று ஒரு நாள் **கைகால் இயங்கமுடியாமல் பேச முடியாமல் படுத்த படுக்கையில் வீழ்ந்தார்.**

அதன்பின் பிஷப் குருவில்லா அவர்கள் பதவியிலிருந்து ஒதுக்கப்பட்டு வேறொரு பிஷப்பை அவர் ஸ்தானத்தில் **சினாட்** தேர்ந்தெடுத்தது. இவருக்கு வந்த இந்த வியாதி தண்டனையா? தேவன் அனுமதித்ததா?

## தமிழ்நாடு கோயமுத்தூர் CSI டையோசிஸ் பிஷப் Rt.Rev. துரை அவர்கள்



**Rt. Rev. Durai**

பல கோடி ரூபாய்கள் டையோசிஸ் பணம் மோசடி செய்யப்பட்டது. நீலகிரி மலை Ketti Engineering College கல்லூரி பணம் பல கோடிகள் பிஷப்பும் அவர் சகோதரரும் சேர்ந்து மோசடி செய்த வழக்கும் இன்னும் பல்வேறு பிரச்சனைகளிலும் இவர் அகப்பட்டார். தென் இந்திய திருச்சபை CSI சரித்திரத்திலேயே **பிஷப் துரை** அவர்கள்தான் சிறைக்கு சென்றவர். மட்டுமல்ல CSI பிஷப் ஒருவர் பிஷப் பதவியிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டார் என சரித்திரம் படைத்தவர். காரணம் நீதிமன்றத்தால் குற்றவாளி Acused என்று தண்டிக்கப்பட்டவர். பிஷப் பட்டம் நீக்கப்பட்டபின் சாதாரண ஆயராகக்கூட யாரும் அவரை உபயோகப் படுத்துவதில்லை. இப்போது தனிமை, வெல்லூரில் மகனுடன் இருக்கிறார்.

உயர்ந்த பதவி மேய்ப்பர்களுக்கு தலைவன், ஆனால் டையோசிஸ் பணம் கோடிக்கணக்கில் களவாடல் இப்படிப்பட்ட குற்றச்சாட்டால் எல்லாராலும் ஒதுக்கப்பட்டார். இன்று பரிதாப நிலை, கர்த்தரை விட்டும், சபை மக்களை விட்டும் ஒதுக்கப்பட்டார். **இது தண்டனையா? தேவன் அனுமதித்ததா?**

## தூத்துக்குடி நாசரேத் CSI டையோசிஸ் பிஷப் Rt. Rev. ஜெபசந்திரன்

சுமார் 1.25 கோடி ரூபாய்க்கு கெமிக்கல் மணல் முதலாளிகளால் அன்றைய மாடரேட்டருக்கு பணம் கொடுத்து விலைக்கு வாங்கப்பட்டவர். தங்கள் கை பொம்யாக உபயோகிக்க **கிராம சபையில்** ஆயராக இருந்தவரை ஆங்கிலம் பேசத் தெரியாதவரை **பிஷப்** ஆக்கினார்கள். டம்மியாக செலாற்றினார். டையோசிஸில் என்ன நடக்கிறது என்றே தெரியாமல் **நீட்டிய இடத்தில்** கையொழுத்து போட்டவர். **செக் புக்** முழுவதிலும் **கையொழுத்திட்டு** செயலரிடம் ஒப்படைத்ததால் அவர் இஷ்டம்போல் கோடிக்கணக்கில் டையோசிஸ் பணத்தை பேங்க்கில் இருந்து எடுத்துக்கொண்டார். அரசாங்க வருமானத்துறையினர் கணக்கை பரிசோதித்து பிஷப் அவர்கள் அகப்பட்டு **நீதிமன்றத்தில்** நிறுத்தப்பட்டார். ஜெயிலில் அடைக்கப்படும் நிலையில் காப்பாற்றப்பட்டார்.



**Rt. Rev. Jabachandran**

சினாட் அவரை தற்காலிக பதவி நீக்கம் செய்தது. சினாட் ஆபிஸில் மாடரேட்டர் அங்கியை பிடித்து **மாடரேட்டரை அடிக்க** முயனறார். மற்ற பிஷப்மார் அவரை விலக்கி மாடரேட்டரை காப்பாற்றினார்கள். உடனே சினாட் ஆபிஸில் **மாடரேட்டர்** டேபிள் முன் அமர்ந்து **தர்ணா** செய்த **முதல் பிஷப்** என்ற சரித்திரம் படைத்தவர். தன்னை டிஸ்மிஸ் செய்யும்படி பிடிவாதம் பிடித்த

முதல் பிஷப்பும் இவர்தான். இப்போது தூத்துக்குடிக்கு புது பிஷப் அவர்கள் CSI சினாட்டால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனால் பிஷப் Rt.Rev. ஜெபசந்திரன் அவர்கள் தான் பதவியில் இருக்கிறாமா? இல்லையா? நீக்கப்பட்டிருக்கிறோமா! என்று அறியாத நிலையில் அவர் இருக்கிறார்.

இப்போது தன் சொந்த ஊரிலேயே தங்கியிருக்கிறார். எந்த ஆலய ஆராதனைக்கும் போக முடியவில்லை. திருவிருந்து எடுக்க முடியவில்லை. இப்போது சொந்த ஊரைவிட்டு திருநெல்வேலியில் தங்கி பல பிரச்சனைகளுக்கு நடுவே பரிதாபமாக இருக்கிறார்.

மேய்ப்பர்களுக்கெல்லாம் தலைமை மேய்ப்பன், உயர் பதவி வகித்தவர். பிஷப்பாக பதவிலிருக்கும்போதே CSI சினாட் மூலம் நீக்கப்பட்டவர். பல அவமானத்துக்கு மத்தியில் CSIயிலிருந்து விலகி Tirunelveli Diocese Trust Association (TDTA)ல் வெறுமனே பொம்மை பிஷப்பாக இருக்கிறார். அவர்கள் அழைக்கும் சமயம் போய் வருகிறார். இந்த அவமானமான ஒதுக்கப்பட்ட நிலை **கர்த்தர் கொடுத்த தண்டனையா? தேவனால் அனுமதிக்கப்பட்டதா?**

## (ALC) Arcot Luthran Church


இந்த லூத்தரன் சபையில் பிஷப் பதவி ஏற்ற இரண்டு பிஷப்மாரில் ஒருவர் பதவி வகித்த உடனே ஏராளமான பண ஊழலில் அகப்பட்டார் டையோசிஸ் நிலங்களை விற்றார். கோர்ட்டில் நிறுத்தப்பட்டார். நீதிபதி தீர்ப்பு கூறும்முன் **ஸ்ட்ரோக்** வந்து கை கால் இயங்காமல் படுக்கையிலேயே அவர் ஆவி பிரிந்தது.

அடுத்து வந்த பிஷப்பும் பதவி ஏற்று பல ஊழல்களில் அகப்பட்டார். ஆனால் பிஷப் பதவியில் மூன்று வருடம் இருந்தார். திடீரென்று இருதயம் நின்றது. இறந்து போனார். இவர்கள் இருவரும் மிக உயர்ந்த பிஷப் பதவி வகித்தவர்கள். பல வெளிநாடுகளில் சென்று உயர்ந்த படிப்பு படித்த பண்டிதர்கள். ஆனால் முடிவு. **இது கர்த்தரின் தண்டனையா? தேவன் அனுமதித்ததா?**

## CSI மாடரேட்டர் Most Rev. தாமஸ் K. உம்மன்

கேரளாவில் மத்திய கேரளா CSI டையோசிஸின் பிஷப்பும் CSIயின் மிக உயர்ந்த பதவியான **மாடரேட்டராக பதவியிலிருப்பவர். மத்திய கேரளாவில்** CSIசபைகளில் ஆயராக பணியாற்றும்போது அனைத்து மக்களாலும் நல்ல ஆயர் என்று பெயர் எடுத்தவர். **மாடரேட்டார்** என்ற **பதவி உயர்வும்** பெற்றார். ஆனால் திடீரென்று **நவீன உபதேசத்துக்குள்** வீழ்ந்தார். **லெந்து கால உபவாச ஜெப குறிப்பு** என்ற பெயரில் 24 CSI டையோசிஸ்களுக்கும் அறிவிப்பு ஒன்றாக வெளியிட்டார். அதில் **கடவுள் குடும்பம்** (வசுதெய்வ குடும்பம்) என்ற புதிய உபதேசத்தை CSI சபைகளுக்கு அறிமுகப்படுத்தினார். இது இந்திய பிரதமர் திரு. மோடி அவர்கள் உபயோகித்த ஆபத்தான பிசாசின் உபதேசம் ஆகும். (Corbon Fast) **பூமித்தாய்** என்ற வார்த்தையை உபயோகித்து சபை என்ற கடவுள் குடும்பத்தில் (Gay) ஆண் புணர்ச்சிகாரர் Lesbian பெண்ணோடு பெண் திருமணம் செய்வது ஆகிய இப்படிப்பட்ட நம் தெய்வம் அறுவறுக்கும் **சோதோம் கொமாராவின்** பாவத்தை Genconclave என்ற தலைப்பில் கூடிய கூட்டத்தில் அறிமுகப்பட்டதாகும். Desmond Tutu என்று கடவுளின் குடும்பத்தினருக்கு பெயர் சூட்டப்பட்டது.

**இப்படிப்பட்ட பிசாசின் பாவ உபதேசத்தை** நம் CSI மாடரேட்டரும் மத்திய கேரள டையோசிஸ் பிஷப்புமான Most Rev. தாமஸ் K. உம்மன் அவர்கள் தென் இந்தியாவிலுள்ள அனைத்து CSI டையோசிஸ்ஸிலும் அந்த உபதேசம் பின்பற்ற வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார். இந்த ஆபத்தை CSI அங்கமான நான் என் ஜாமக்காரன் பத்திரிக்கை வாசகர்களுக்கு எச்சரித்து, அறிவித்து எழுதினேன். CSI மாடரேட்டர் கூறும் அந்த ஆலோசனையை யாரும் செவி சாய்க்க வேண்டாம் என்று எழுதினேன்.



CSI Modarator

Most Rev. Thomas K. Oomman

அந்த நவீன உபதேசத்தின் ஆபத்தை மத்திய கேரளத்தில் உள்ளவர்கள் இன்னும் உணரவில்லை. ஆபத்தின் விளைவு இன்னும் வெளிப்படையாக தெரியவில்லை. அனால் மற்ற டையோசிஸ்களில் இதை குறித்த சர்ச்சை எழுந்துள்ளது. சில ஆயர்கள் அந்த உபதேசத்தை மனித நேயத்தோடு அனுகி 3வது பாலினத்தவரை சபைக்குள் அதிகாரத்தில், பதவிகளில் அவர்களுக்கு இடம் கொடுக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே எச்சரிக்கையாக இருங்கள் என்பதை மட்டும் அறிவிக்கிறேன்.

இதை வாசிக்கிற மத்திய கேரள டையோசிஸ் அச்சன்மார்கள் சபை மக்களாகிய நீங்களே கூறுங்கள். நான் எழுதியது தவறா? பொய்யா? பிஷப் அவர்களை **அவமானப்படுத்தவா** எழுதினேன்?. நம் CSI மக்கள் பிஷப்கூறும் பாவ உபதேசத்தில் விழக்கூடாது என்பதற்காகதானே எழுதினேன். அதில் என்ன தவறு.? நீங்கள் கூறுங்கள் அவர் அப்படி எழுதியதால் ஏற்பட்ட விளைவு என்ன? நான் எழுதியதற்கு மாடரேட்டர் கோபப்பட்டு எனக்கு எதிராக செயல்பட்டார். **உடனே தேவ கோபம் இறங்கியது.** உடனே மாடரேட்டருக்கு **ஸ்ட்ரோக் வந்தது** கை கால் **இயங்கவில்லை. இயேசு** என்று கூற **நாக்கு எழுவில்லை.** வெல்லூர் **CMC ஆஸ்பத்திரியில்** ICU வார்டில் ஆபத்தான கட்டத்தில் சேர்க்கப்பட்டார். நானும் சென்று அவருக்காக ஜெபித்து வந்தேன். அவர் இந்த படுக்கையிலிருந்து சுகம் பெற வேண்டும் என்றும். சுயநினைவு வரவேண்டும். தான் அறிவித்த பிசாசின் (அந்தி கிறிஸ்துவின்) ! **உபதேசத்திலிருந்து** மாடரேட்டர் அவர்கள் வெளி வரவேண்டும். எங்கள் மாடரேட்டரை **பிசாசின் உபதேச கட்டுகளிலிருந்து** காப்பாற்றுங்கள்! என்று ஜெபித்து வந்தேன்.

இப்போது ஓரளவு சுகம் பெற்றுள்ளார் கையெழுத்து மட்டும் மாறியுள்ளதாக அறிந்தேன். எழுதவும். கை நீட்டி சபை மக்களை **ஆசீர்வதிக்கவும்** அவருக்கு பெலம் தாரும் என்று தொடர்ந்து ஜெபிப்போம். இப்போது சொல்லுங்கள்.

**மாடரேட்டருக்கு** வந்த ஸ்ட்ரோக் **பாவத்தால் வந்ததா? தேவன் அனுமதித்ததா?**

தெய்வத்தை அறியாதவர்கள். வேத வசனம் அறியாதவர்கள் தவறு செய்தால் அடி குறைவாக இருக்கும். தெய்வத்தையும் வசனத்தையும் அறிந்து தவறு செய்தால் அநேக அடிக்கள் கிடைக்கும் என்று வேத புஸ்தகம் எச்சரிக்கிறது.

# இயேசு அழைக்கிறார் Bro. D.G.S. தினகரன்



**Bro. D.G.S. Dinakaran**

இவர் ஊழியத்தில் ஆயிரக்கணக்கானவர் தொடப்பட்டனர். ஆயிரக்கணக்கில் இவர் பிரசங்கம் மூலம் ஆறுதல்பெற்று மரணத்திலிருந்து பிழைத்தார்கள். இவர் ஊழியம் மூலம் தொடப்பட்ட பலர் ஆயரக்கணக்கானவர். பெரிய ஊழியர்களாக இன்று ஜொலிக்கிறார்கள். நன்றாக இயங்கிக்கொண்டிருந்த இவர் ஊழியம் பெறும் விழுகையை சந்தித்தது. மற்ற எவரையும்விட இவரையும் இவர் வாழ்க்கையையும் உள்ளும் புறமும் மிக நன்றாக அறிந்தவனும் மிக நெருக்கமாக இருந்த ஒரு நபர் நான் தான்.

☐ ரேடியோ மூலம் இவர் பிரசங்கிக்க முதன் முதல் ஏற்பாடு செய்தவன் நான்தான். அன்று TV இல்லாத காலம் இவர் பிரசங்கத்துக்கு முன்பும் பின்பும் ரேடியாவில் இவரை அறிமுகப்படுத்தி பிரசங்கம் முடிந்தவுடன் முடிவுரை கூறி தொடர்பு விலாசம் அறிவித்து முடிவு ஜெபமும் செய்து நிகழ்ச்சியை முடிப்பேன்.

☐ சொந்தமாக பத்திரிகை தொடங்க ஆலோசனை கொடுத்து பெங்களூர் கன்டோன்மென்ட்டில் உள்ள பாஸ்டர் K.R. பால் அவர்கள் சபை கட்டிடத்தில் பத்திரிகை தொடங்க அஸ்திவாரம் இட்டதும் நான் தான்.

## இயேசு அழைக்கிறார் பெயர்

**இயேசு அழைக்கிறார்** என்ற பெயரை தேர்ந்தெடுத்ததும் நான் தான். இந்த விபரம் பழைய ஜாமக்காரனில் வாசிக்கலாம். பள்ளி மைதானத்தில் வைத்து நடத்திய பொதுகூட்டத்தில், ஈரோடு CSI சபையினர் நாங்கள் அமர்ந்திருந்த மேடைக்கு பின்புறம் ஈரோடு CSI சபையினர் நீல நிறத்துணியில் **இயேசு அழைக்கிறார்** என்று எழுதி வைத்த பெயரை சுட்டிக்காட்டி FEBA வானொலி நிகழ்ச்சிக்கு இந்த பெயரையே நாம் வைத்தால் என்ன? என்று சகோ. தினகரன் கேட்க உடனே அவரே என் கையை பிடித்து அவரின் வேத புத்தகத்தின மீது வைத்து அவருடைய கையை என் கையின்மேல் வைத்து பிரதிஷ்டை ஜெபம் செய்தார். இருபுறமும் அமர்ந்திருந்த ஆயர்கள், அவர் மனைவியும் அந்த அற்புதமான நிகழ்ச்சியை கவணிக்கவில்லை. கைகளை வைத்து **சகோ. தினகரன்** அவர்களே மெல்லிய சத்தத்தில் கர்த்தாவே இந்த **இயேசு அழைக்கிறார்** என்ற பெயரை பிதா குமாரன் பரிசுத்தாவியானவரின் நாமத்தில் உம் மகிமைக்காக, ஊழியத்துக்காக **பிரதிஷ்டை** செய்கிறோம். இதே பெயரில் நாங்கள் செய்ய இருக்கும் மற்ற எல்லா ஊழியங்களையும் தேவரீர் ஆசீர்வதித்து உம் நாமத்தை மக்கள் மத்தியில் மகிமைப்படுத்தும். **எங்களை**ஒரு கருவியாக மாத்திரம் உபயோகப்படுத்தும் என்று கூறி ஜெபித்தார். பாடல் குழுவினரின் சத்தத்தில் சகோ. DGSன் ஜெபம் யாரும் கேட்டிருக்க முடியாது.

இதன்பின்தான் **இயேசு அழைக்கிறார்** ஊழியம் குறுகிய காலத்தில் உச்ச நிலையை எட்டியது. முதல் முறையாக அமெரிக்க பயணம் சென்றார். **ஓரல் ராபர்ட்** யூனிவர்சிட்டியை நேரில் கண்டு வந்தார் அவ்வளவுதான். இந்தியாவில் தமிழ்நாட்டில் ஒரு யூனிவர்சிட்டி ஆரம்பிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பாமல் **கனடா** நாட்டுக்கு சென்றார். அங்கு அவரும் நானும் கனடா செல்லும் போதெல்லாம் எங்களை அன்போடு உபசரித்து தங்கள் வீட்டை திறந்து கொடுக்கும் ஒரு நல்ல ஆவிக்குறிய குடும்பம் இருந்தது. நாகர்கோவில் **ஜேம்ஸ்டவுன்** அவர்களின் சொந்த ஊராகும். அவர்கள் வீட்டில் சகோ. தினகரன் அவர்களின்

குடும்பம் மட்டும் தங்கின வேளையில் வீட்டின் கீழ் அறையில் (Basement) அமர்ந்து அந்த குடும்பத்தினரோடு பேசும்போது முதன்முதல் தமிழ்நாட்டில் கல்லூரி பணியும் தன் ஆசையை அந்த குடும்பத்தினருடன்தான் பகிர்ந்து கொண்டார். தான் இந்தியாவில் கல்லூரி தொடங்க ஆசைப்படுவதாக அவர்களிடம் கூறியிருக்கிறார்.

## இயேசு அழைக்கிறார் ஊழியம்

**இயேசு அழைக்கிறார்** ஊழியம் ஐந்து பேர் இணைந்து நடத்திய ஊழியமாகும். கோவை கிணத்துகடவு என்ற இடத்தில் BDOஆக வேலை செய்த **சகோ. லைனல்.** PSG கல்லூரியில் பணியாற்றிய அவரின் தம்பி Prof. Benny அவர்களும் லட்சுமி மில்ஸில் வேலைசெய்து வந்த **எட்வர்ட் பால்** என்பவரும் **டாக்டர் புஷ்பராஜ்** ஆகிய நானும் சகோ. DGS தினகரனுமாகிய ஐந்து பேர் சேர்ந்துதான் அன்றைய நாட்களில் இயேசு அழைக்கிறார் கூட்டங்களை ஏற்பாடு செய்வோம்.

கனடாவிலிருந்து சகோ. DGS அவர்கள் இந்தியா திரும்பியவுடன் எங்களை அவசரமாக அழைத்து ஒரு பகல் உபவாச ஜெபம் அவர் வீட்டில் ஏற்பாடு செய்தார். அப்போது அவர் சென்னையில் கிண்டியில் ஸ்டேட்பேங்க குவார்ட்ரஸ்ஸில் குடியிருந்தார்.

## சகோ. DGS தினகரனின் முதல் விழுகை

மேலே குறிப்பிட்ட அந்த வீட்டில் நாங்கள் ஐந்து பேர் ஜெபிக்கும்போது **காருண்யா கல்லூரி** தொடங்க ஆசைப்படும் விஷயத்தை பகிர்ந்துகொண்டார். அவர் பேசி முடிக்கும் முன்பே எங்கள் குழுவில் உள்ள **Bro. எட்வர்ட் பால்** அவர்கள் Bro. தயவுசெய்து **கல்லூரி ஆரம்பிக்கும் ஆசையை கைவிடுங்கள்.** நாம் இயேசு அறிவிக்க மட்டும்தான் இந்த ஊழியத்தை தொடங்கினோம். சுவிசேஷ ஊழியத்தை தவிர **கல்லூரி விஷயத்தில்** இறங்கினால் நீங்கள் **வியாபாரி ஆகிவிடுவீர்கள்.** எங்களுக்கு இதில் **ஒப்புதல் இல்லை** என்று நாங்கள் நால்வரும் ஒரே குரலில் கூறிவிட்டோம். நான் DGS அவர்களிடம் கூறினேன், **கல்லூரி** யூனிவர்சிட்டி இவை யாவும் **டையோசிஸ்** செய்யட்டும் அல்லது CSI சபைகள் செய்யட்டும். அது நம்முடைய வேலை அல்ல என்றேன்.

அதன்பின் சில வாரத்தில் கல்லூரி கட்ட நிலம் வாங்க புரோக்கர்களை நாடினார். கல்லூரிஆரம்பிக்க அவர் பிடிவாதமாக இருந்ததால் நாங்கள் நால்வரும் அவரோடுள்ள தொடர்புகளை நிறுத்திக்கொண்டு அவரவர்களின் ஊழியத்தை தொடர்ந்து செய்ய தொடங்கிவிட்டோம்.

சகோ DGS தினகரன் **கல்லூரி** தொடங்க மிக முக்கிய காரணம் **இயேசு அழைக்கிறார்** ஊழியத்தில் **பணம் கொட்டோ கொடடென்று** கொட்டியது. வந்த பணத்தை என்ன செய்வதென்று தெரியவில்லை. மிஷனரி ஸ்தாபணம் தொடங்கவோ சபைகள் தொடங்கவோ அவருக்கு நாட்டம் இல்லை. பணத்தை வீனாக வருமான வரித்துறையினர் ஏன் தூக்கிகொண்டு போக வேண்டும். அந்த பணத்தில் காருண்யா கல்லூரியும் அதை தொடர்ந்து யூனிவர்சிட்டியும் கட்ட தொடங்குவோம் என்று கூறி செயலில் இறங்கிவிட்டார்.

## Bro .D.G.S. தினகரன் அவர்கள் பேசிய முதல் பொய்

**முதல் பொய் :** காருண்யா தொடங்க கர்த்தர்தான் சொன்னார் என்று துணிந்து பொய் சொன்னார். எனக்கு கல்லூரியை பற்றி ஒன்றும் தெரியாது என்றேன். உடனே தூதர்கள் வந்தார்கள் கல்லூரி வரை படத்தை காட்டினார்கள். அதன்படித்தான் நான் காருண்யா கல்லூரியை கட்டினேன் என்றார்.

**இரண்டாம் பொய் :** ஏழை பிள்ளைகளுகக்காகவே இலவசமாக கல்வி பயில கல்லூரியை கட்டுகிறேன் என்றார். இன்று ஒரு லட்சம் கொடுக்காத ஏழைகளே இல்லை. இது பச்சை பொய் அல்லவா?

**மூன்றாம் பொய் :** கல்லூரியை விரிவுபடுத்த பெரும் தொகை தேவைப்பட்டது. உடனே கர்த்தர் சொன்னார் என்ற பெயரிலேயே ஒரு ஏமாற்று பொய்யை அவிழ்த்துவிட்டார் பாருங்கள். அதை பொய்யாய் இருக்குமோ என்று கொஞ்ஜம்கூட யோசிக்காமல் நம்பினவர் ஏமாளிகள் கூட்டத்தில் பிஷப்புகளும், ஆயர்களும் பெரிய படிப்பு படித்தமுட்டாள். புத்திசாலிகள், பட்டதாரிகள் பள்ளி, கல்லூரி பிரின்சிபால் முதல் பியூன் வரை அந்த வஞ்ஜக பொய்யில் விழுந்தார்கள்.


## அதுதான் இளம் பங்காளர் திட்டம்

ஒரு வீட்டில் எத்தனை பிள்ளைகள் உண்டே அத்தனை பிள்ளைகள் பெயரில் ரூபாய் 2000 கட்டி இளம்பங்காளர் திட்டத்தின்மூலம் ஊழியத்தில் இணைக்கப்பட்டால் 25 வருடங்களுக்கு அந்த பிள்ளைகளுக்கு எந்த வியாதியும் ஆபத்தும் வராது.

பணம் கொடுக்க முடியாத ஏழைபிள்ளைகளுக்கு யார் ஜெபிப்பார்கள் என்று இவர் திருட்டுதனத்தை கண்டுபிடித்த அவரின் தூரத்து உறவினரே கேட்டார். அதை ஜாமக்காரனில் நான் அறிவித்தபோது மளமளவென்று அப்போதுதான் பலருக்கு உரைத்தது. அவர்களும் கேள்வி கேட்டார்கள்.

உடனே சகோ. தினகரன் சுதாரித்துக்கொண்டு இன்ஸ்டால்மென்ட் முறையில் 100 ரூபாயாக கொஞ்ஜ கொஞ்ஜமாக பணம் அனுப்பினால் 2000 சேர்ந்தவுடன் ஜெபம் ஆரம்பிக்கப்படும். இது வாஷிங்மிஷின், TVயா மாதத் தவனையில் பணம் அனுப்ப என்றாலும், நல்ல மாங்கா மடையர் ஏராளமானவர்கள் 2000 அனுப்பினர். நல்ல ஆவிக்குரிய குடும்பம் என்று பைபிள் ஸ்டடி எடுப்பவர்கள் என்ற ஆழமான அனுபவம் உள்ளவர்களும் பணம் அனுப்பினார்கள் என்பதை கேட்க அவமானமாகவும் துக்கமாகவும் இருந்தது.

**நான்காம் பொய் :** பரலோகம் சென்று வருவது அடிக்கடி பரலோகம் சென்று வருவதாக கூறியதோடு மட்டுமல்ல, இயேசு வீட்டுக்கே ஜெப நேரத்தில் வந்து மணிகணக்காக பேசுவாராம் எனக்கு நிறைய வேலையிருக்கிறது மறுபடியும் சந்திப்போம் என்று இயேசுவை துரத்தாத குறையாக அனுப்பிவைப்பாராம், என்ன கூத்து இது. அதன்பின் கதவை அடைத்து காலை ஜெபத்தை செய்வாராம். ஜெபத்தை கேட்பவரையே வீட்டைவிட்டு கட்டாயப்படுத்தி துறத்திவிட்டு இவர் யாரிடம் ஜெபம் செய்தார்.




**ஐந்தாம் பொய் :** என் முதல் குழந்தை பிறந்தவுடன் அது செத்துப்போனது. அது ஆண் குழந்தை இப்போது அந்த ஆண் பையன் எப்படி இருப்பான் என்பதை பார்க்க எனக்கு ஆசை என்று ஆவியானவரிடம் கேட்டாராம். உடனே DGS

பரலோகம் அழைத்து செல்லப்பட்டு ஒரு திண்ணையில் அமர சொல்லி இயேசு கிறிஸ்து எங்கோ உள்ளேசென்று வளர்ந்த ஒரு பையனை அழைத்து வந்தாராம். எனக்கு ஆச்சரிம் தாங்க முடியவில்லை. இப்போதுள்ள இரண்டாவது மகன் பால் தினகரனைபோலவே இருக்கிறான். அப்படியே முகசாயல் இருந்தது. ஆனால் பாலைவிட கொஞ்ஜம் உயரமாக வளர்ந்து இருக்கிறான். கோட்டும் டையும் கட்டி உடையுடன் வந்தான் என்றார். இதை மக்கள் நம்பினார்கள்.

☐ மரித்தவர்கள் எந்த வயதில் எந்த உயரத்தில் மரித்தார்களோ அப்படியேதான் இருப்பார்கள். ஆபிரகாம் ஆபிரகாம் மாதிரியே இருப்பார். ஈசாக்கு லாசரு எப்படி மரித்தார்களோ அப்படியேதான் இருப்பார்கள். 40 வயதில் 90 வயதில் மரித்தால் மரிக்கும்போது எப்படிபட்ட உருவத்தில் குண்டாக, ஒல்லியாக எப்படியிருந்தார்களோ அப்படியேதான் இருப்பார்கள். அங்கு வளர்ச்சியும் இல்லை. உடல் குண்டாவதும், ஒல்லியாவதும் இல்லை. வேதம் இவ்வளவு தெளிவாக சொல்கிறது, ஆனால் தினகரன் மூத்த மகன் மட்டும் உயரமாக உயரமாக வளர்ந்துவிட்டார் என்கிறார் பரதேசியில் டை கோட்டு ஆகிய உடைகளை எந்த மால் அல்லது துணிகடையில் கிடைத்ததோ? தெரியவில்லை. இப்படி துணிந்து பொய் பேசும் போது கேட்கிற நமக்கு என்ன தோன்றும் ? வசனம் தெரியாதவர்கள் நம்புவாரகள்.

மற்றொரு நாள் பரலோகத்தை காண வேண்டும் என்று அருள்நாதரிடம் கேட்டுக்கொண்டதால் ஆவியானவர் கூட்டிகொண்டு பரலோகத்தில் விட்டார். பரவசமாக இருக்கிறது. அங்கேயே இருந்து விடலாம் போல் இருந்தது. இங்கு இந்தியாவில் பலர் என் ஜெபத்துக்காக காத்திருக்கிறார்களே என்பதற்காக பரலோகத்தை சுற்றிப் பார்த்துவிட்டு போகிறேன் என்றாறாம். உடனே இயேசு பேதுருவை அழைத்து பரலோகத்தை எனக்கு சுற்றிக்காட்ட கூறினார்.

இப்படிப்பட்ட பொய்கள்மூலம் தனக்கும் பரலோகத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்றும் இயேசு எப்போது கூப்பிட்டாலும் வேலைக்காரனை போல மாதிரி வந்து போகிறவாராக இருக்கிறார் என்பதை மக்களை நம்ப வைக்க கூறிய பொய்யாகும்.

இவைகள் எத்தனை பெரிய பொய்கள். கொஞ்ஜமாவது அவருடைய ரசிகர் யோசியுங்கள்.

**யோவா 3:13 பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்தில் இருக்கிறவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனும் இல்லை.** இந்த வசனப்படி சகோ. தினகரன் அவர்கள் மேலே கூறினவைகள் யாவும் நூற்றுக்குநூறு பொய்யானவைகள் ஆகும்.

**ஆறாம் பொய் :** காருண்யாவை யூனிவர்சிட்டி ஆக்க அன்றைய மந்திரி அசோக் சிங்கால் எனபவர் கையெழுத்து போட வேண்டும்? அவர் இந்துமத தீவிரவாதி, கையெழுத்து போட மாட்டார். அவரை கைெழுத்து போட சிபாரிசுக்கு காஞ்ஜி மட சங்கராச்சாரியாரை தகப்பனும், மகனும் நேரில் சந்தித்து அவரிடம் ஆசிபெற்று பரிசாக நம் கர்த்தர் அருவருக்கிற விக்கிரக ஆராதனைக்காக வெள்ளியில் விஷேசமாக தயாரிக்கப்பட்ட **பூஜை பொருட்களை** அவருக்கு பரிசாக கொடுத்து வந்தார். ஒரு இந்து மத தலைவனுக்கு ஒரு வேத புத்தகம் பரிசாக கொடுத்திருக்க வேண்டாமா? ஆனால் கையெழுத்தும் கிடைக்கவில்லை, சிபாரிசும் கிடைக்கவில்லை.



சகோதரன் தினகரன் காருண்யா கல்லூரியை தொடங்கியதும் அதை தொடர்ந்து பேசப்பட்ட தொடர் பொய்களும் **தேவ கோபத்தை** உண்டாக்கியது. **தேவ கோபம்** சகோ. தினகரன் குடும்பத்தின்மேல் இறங்கியது. விமான நிலையத்துக்கு போகும்போது அவருடைய **மகள் கார்** விபத்தில் அதே இடத்தில் மரித்து போனாள். சகோ. தினகரனும் அவர் மனைவியும் மட்டும் உயிர் பிழைத்தார்கள்.

தண்டனையைப்பற்றி தேவ மனிதன் பாஸ்டர் சுந்தரம் மூலம் எச்சரிக்கப்பட்டார். **கல்லூரி நடத்த வேண்டாம்,** ஊழியம் மட்டும் செய் என்றார். கேட்கவில்லை. பாஸ்டர் ஜீவானந்தம் எச்சரித்தார். கேட்கவில்லை. **மகளை கர்த்தர் கொடூரமான முறையில் மரணத்தை** சந்திக்க வைத்தார் என்றாலும் சகோ. DGS அவர்கள் கர்த்தரின் சிட்சையை அற்பமாக எண்ணினார்.

**இரண்டாவது தண்டனையாக வியாதி வந்தது.**

சகோ. தினகரன் **இருதய வியாதியால்** மிகவும் பாடுபட்டார்.

**கிட்னி செலிழந்தது.** அமெரிக்கா சென்று **கிட்னி** பொருத்திக்கொண்டார். ஆனால் அது சரியாக இயங்காமல் பழுதுபட்டது. **இரண்டாவது கிட்ணி** விலைக்கு வாங்கி பொருத்திக்கொண்டார். அதுவும் உடலோடு இணையவில்லை.

இருதயம் செயலிழந்தது **இரண்டு முறை ஆப்பரேசன்** செய்து சகோ தினகரனை காப்பாற்ற வேண்டியதானது. இருதயத்தை இயற்கையாக இயங்க வைக்க முடியவில்லை. பேஸ்மேக்கர் என்ற கருவியை வைத்து பார்த்தனர். இரண்டு முறையும் அது இவருகசு பொருந்தவில்லை.

வேறு வழியின்றி மரணத்தை சந்திக்க வேண்டியதானது. **ஆவியால் ஆரம்பித்து மாமிசத்திலா முடிக்கிறீர்கள்** என்று பவுல் கூறினார். சகோ. தினகரன் காருண்யா கல்லூரியை ஆரம்பிக்காத வரை அவர் வாழ்க்கை, அவர் ஊழியம் மிகச் சிறப்பாக இருந்தது. இயேசு கிறிஸ்துவின் கிருபை மிக அற்புதமாக அவரை இயங்க வைத்தது.

சகோ. தினகரனின் **விழுகையும்** அடுத்து அடுத்து பேசின **பொய்களும் ஆண்டவர் மனதை மிகவும் வேதனைப்படுத்தின.** ஆவியானவர் மனிதனோடு எப்போதும் போராடுவதில்லை.

முடிவில் **தேவ கோபம்** சகோ. தினகரன் மேல் இறங்கியது. அதற்குமேல் அவரை வாழவைக்க கர்த்தர் விரும்பவில்லை.

காரணம், அவர் மூலமாக அவரை கண்டு அவரை பின்பற்றி நாலுமாவடி **லாசரஸ்சை போல** ஏராளமான **ஊழியர்கள் மக்களை ஏமாற்ற ஆரம்பித்தார்கள்.** அதற்காகத்தான் அவருக்கு அந்த மரணம். ஆனால் அந்த மரணத்துக்கு முன் சரீரத்தில் ஒவ்வொரு அவயஅவயமாக பழுதுபட ஆரம்பித்து பலமுறை வலியினால் துடித்துபோனார். அவர் மரணம் நல்ல மரணம் அல்ல அது. பலரை எச்சரிக்கும் மரணம். குறிப்பாக ஜெபத்தில் பெயர் சொல்லி அழைக்கும் ஊழியர்களை எச்சரிக்கும் மரணம்.

**பொய்** கர்த்தருக்கு அருவருப்பாகும். **பொய் பேசுபவர்கள்** இரண்டாம் அக்கினியிலே தள்ளபடுவார்கள் என்று வேதம் கூறுகிறது.


சிலருடைய பாவங்கள் **வெளியரங்கமாயிருந்தது.** நியாய தீர்ப்புக்கு முந்திக்கொளளும் சிலருடைய பாவங்கள் அவர்களை **பின்தொடரும்.** 1 தீமோ. 5:25

சகோ. DGS தினகரனின் வியாதிகள் மகளின் கோர விபத்தின் மரணம்.

**கர்த்தர் கொடுத்த தண்டனையா? தேவன் அனுமதித்ததா?**

# வாழ்த்துகிறோம்... வரவேற்கிறோம்...

## கன்னியாகுமரி CSI டையோசிஸ்க்கு புதிய பிஷப்



Rev. Dr. A.R. **செல்லையா,**

நாகர்கோவில் ஹோம் சர்ச் கேத்தடிரில் சர்சின் தலைமைய ஆயராக பணியாற்றிய **Rev. Dr. A.R. செல்லையா** அவர்கள் பிஷப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பல சபைகளில் ஆயராகவும் பல பொது பணிகளிலும் ஈடுபட்டவர். எழுதும் தாலந்து பெற்றவர்.

முக்கியமாக டையோசிஸ் சொத்துக்களை ஒழுங்குபடுத்தவும் டையோசிஸ்ஸில் உள்ள சபைகளின் நிலங்கள் சட்ட ஆலோசகரின் உதவியுடன் டையோசிஸ் பயன்பாட்டுக்காக கொண்டுவர அதை தவறாக பயன் படுத்துவோரிடமிருந்து கையகப்படுத்துதல் போன்ற விஷயங்களில் கவணம் செலுத்துபவர் என்று கூறப்படுகிறது.

இவர் தம் பணி நிறைவு 6 ஆண்டுகளிலும், திருமண்டலத்தை ஆவிக்குரிய வளர்ச்சியிலும் வசனத்திலும் வழிநடத்தி நவீன உபதேசங்கள் சபைக்குள் நுழைந்துவிடாதபடி திருமண்டலத்தை வழி நடத்த ஜெபிப்போம்.

இவர் துணைவியார் திருநெல்வேலி சாரர் டக்கர் கல்லுூரியின் பேராசிரியராக பணிபுரிந்தவர். இவருடைய மகன், மருமகள், மகள் மருமகன் யாவரும் மருத்துவர்களாக தொழில் செய்கிறார்கள். ஐயா அவர்கள் ஆயராக பணியாற்றிய இரண்டு ஊர்களில் கன்வென்ஷனுக்கு அழைக்கப்பட்டிருக்கிறேன்.

கடந்த 2019 ஜுலை மாதம் கன்னியாகுமரியில் சபை உருவாக காரணமான முதல் மிஷனரி **ரீங்கல் தொபே** அவர்கள் கட்டிய முதல் ஆலயமாகிய **மைலாடி ஆலயத்தில்தான்** என் பிஷப் அபிஷேக ஆராதனை நடத்தப்படவேண்டும் என்று ஆசைப்பட்டார். அது சிறிய ஆலயம் தான். ஆனாலும் கிறிஸ்துவை கன்னியாகுமரி மக்களுக்கு அறிமுகப்படுத்திய மிஷனரி ரிங்கல் தொபே அவர்களை தன் முன்மாதிரியாக வைத்து ஊழியம் செய்ய அவர் ஆசைப்பட்டது நிறைவேறியது. அவர் எண்ணத்தை பாராட்டுவோம்.

மேலும் பிஷப் பதவி ஏற்றவுடன் தனக்கு யாரும் மாலையோ, பொன்னாடையோ, துண்டோ போடக்கூடாது. மட்டுமல்ல எந்த கல்வெட்டிலும் என் பெயர் எழுதப்படக்கூடாது என்பதுபோன்ற நிபந்தனைகள் எல்லாரையும் சிந்திக்க வைத்தது.

கன்னியாகுமரி டையோசிஸ் பிஷப் எலக்ஷன், பல பிரச்சனை மத்தியில் நீண்டுபோனாலும் ஒரு நல்ல ஆயர் அவர்களை பிஷப்பாக தலைமை மேய்ப்பனாக Rt. Rev. A.R. செல்லையா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது சந்தோஷம். பிஷப் அவர்களுக்கு ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும் என் தனிப்பட்ட சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஐயா அவர்களை பிஷப்பாக தேர்தெடுத்த கன்னியாகுமரி திருமண்டல அனைத்து **CSI** சபை **மக்களையும் ஆயர்களையும்** வாழ்த்துகிறேன்.

**குறிப்பு:** கடந்த கால பிரச்சனைகள் சொத்து பிரச்சனைகள். கல்லூரி. பள்ளி அப்பாயிண்ட்டி மென்ட் ஊழல்கள நீக்கப்படவும் திருமண்டல ஏழைக் குடும்பங்களுக்கு வேலை விஷயத்தில் முன்னுரிமை கொடுத்து லஞ்சம் இல்லாமல் நிர்வாகம் நடத்தப்படவும் திருமண்டல நிர்வாகிகள் தெய்வ பயத்தோடு பிஷப் அவர்களோடு ஒத்துழைக்க ஜெபிக்கிறேன்.

என் ஊழியத்தில் 1965 வருடம் கன்னியாகுமரி டையோசிஸ்தான் என்னை கன்வென்ஷன் பிரசங்கியராக கரியாவிளை CSI சபை மூலம் அறிமுகப்படுத்திய கன்னியாகுமரி திருமண்டலத்தில் உள்ள ஏறக்குறைய அனைத்து சபைகளிலும் கிராம சபைகளிளும் திருச்சபையை வசனத்தின் வழி நடத்த வாய்ப்பு கொடுத்த கன்னியாகுமரி திருமண்டல சபை மக்களுக்கும் ஆயர்களுக்கும், திருமண்டலத்திற்கும் நன்றியை காட்டும் விதமாக இந்த சந்தோஷ வாழ்த்துதலை அறிவிக்கிறேன்.

# வாசகர்கள் கவனிக்கவும்....

என்னோடு பேச விரும்புகிறவர்கள் குடும்ப பிரச்சனைகளை பகிர்ந்துக்கொண்டு ஜெபிக்க விரும்புபவர்கள் என் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்று தொடர்பு கிடைக்காமல் சலித்துப்போனார்கள். நான் சேலத்தில் இருக்கும் நாட்களான செவ்வாய் புதன் ஆகிய இரண்டு நாட்கள் ஏராளமானவர்கள் ஒரே சமயத்தில் பேச முற்படுவதால் தொடர்பு கிடைப்பதற்கு, லைன் கிடைப்பதற்கு சிரமப்படுவதை நான் உணர்ந்து வேதனைபடுகிறேன்.

அப்படியே எனக்கு வங்கிவழியாக SBI, Canara Bank, NEFT, (online) காணிக்கை பணம் பரிமாற்றம் செய்தபின் அதற்கான பதில் என்னிடமிருந்து கிடைப்பதில்லை. காரணம் வங்கி (Pass Book) புத்தகத்தில் அனுப்புபவர்களின் **பெயர்** காணப்படாது (தொகை காணப்படும்) ஆகவே ஒவ்வொரு மாதமும் கடிதம் எழுதி அல்லது e-mail வழியாக பணம் அனுப்பிய செய்தி அனுப்புவது காணிக்கை அனுப்புபவர்களுக்கு சிரமம். அதனால் என் மனைவியின் மொபைல் நம்பரை ஜாமக்காரனில் எழுதி அறிவித்தேன். இப்போது பலர் அதை பயன்படுத்துவதை அறிந்து சந்தோஷம். மொபைல் எண் . 9894261333 இதை என் அலுவலகத்தில் வைத்துள்ளேன். காணிக்கை அனுப்பியவுடன் உங்கள் மொபைல் வழியாக SMS செய்துவிடுங்கள். அதில் உங்கள் மொபைல் எண்ணையும் உங்கள் பெயரையும் குறிப்பிட்டால் போதுமானது.

அப்படியே ஜெபத்துக்காக, பிரச்சனைகளைப்பற்றிய ஆலோசனைக்காக என்னை தொடர்புகொள்ள விரும்புகிறவர்கள் என் **மொபைல்** நம்பரில் SMS செய்யலாம். அதில் உங்கள் **தொலைபேசி எண்ணை** குறிப்பிட்டால் வாரம் ஒரு முறை நான் என் வீட்டுக்கு திரும்பியவுடன் நீங்கள்SMSல் குறிப்பிட்ட உங்கள் நம்பருக்கு நானே தொடர்புகொண்டு விசாரித்து உடனே ஜெபமும் செய்வேன். அப்படி கடந்த மாதம் ஏராளமானவர்களின் தொலைபேசி எண்ணில் நானே அழைத்து பேசி ஜெபித்து பிரச்சனை நீங்கியுள்ளது. வியாதி சுகமடைந்துள்ளது. இப்படி பல அற்புதம் நடந்துள்ளது.

ஆகவே நீங்கள் என்னை போனில் அழைத்தவுடனே பேச முடியவில்லை என்று சலிப்படைய தேவையில்லை. நான் குறிப்பிட்ட எண்ணிற்கு SMS செய்துவிடுங்கள் **நானே உங்களை அழைப்பேன்,** ஜெபிப்பேன். உங்களுக்கு கோபமோ, என்னோடு பேச லைன் கிடைக்கவில்லை என்ற சலிப்போ உண்டாகாது.

# KASHMIR EVANGELICAL FELLOWSHIP

## HIMALAYA EVANGELICAL MISSION



**Mrs. & Dr. Rev. P.M. THOMAS**

2019 ஜுன் மாதம் என் நீண்ட நாளைய ஆவிக்குறிய நண்பரும் ஊழியருமான Dr. Rev. P.M. தாமஸ் அவர்களின் 90வது வயது ஸ்தோத்திர கூட்டமாக கஷ்மீர் உதம்பூர் என்ற இடத்தில் ஏற்பாடு செய்த கூட்டங்களில் கர்த்தருடைய வார்த்தைகளை பகிர்ந்துகொள்ள அழைக்கப்பட்டேன்.

கேரளாவில் உண்மையுள்ள ஊழியரும் மிஷனரியுமான பாஸ்டர் P.M. தாமஸ் அவர்கள் மிகவும் ஏழை குடும்பத்தில் பிறந்த 9 பிள்ளைகளில் ஒருவராவார். மிகவும் கஷ்டப்பட்டு பலருடைய உதவியினால் கோட்டயம் CMS கல்லூரியில் B.A., ஆங்கிலம் படித்துமுடித்தார். அப்போதே சாப்பாட்டுக்கு வழியில்லாத நிலையில் படிப்பை முடித்தும் மனந்திரும்புதலின் அனுபவம் கிடைத்தது. உடனே ஆசிரியர் வேலை கிடைத்ததும் 18 ரூபாய் சம்பளம்.

சீக்கிரமே ஹெட்மாஸ்டர் பதவி உயர்வு கிடைத்தது. ஆனால் மிஷனரி பாரம் உள்ளத்தில் உண்டானதால் UBS என்ற வேதாகம கல்லூரியில் B.D. முடித்தார். இப்போது இந்த கல்லூரி பூனா நகருக்கு இடம் பெயர்ந்துள்ளது.

திருமணமும் நடந்தது. ஜெபிக்கும் மனைவியாக ஒரு ஊழியரின் மகளை திருமணம் முடித்து தன் வேலையை ராஜினாமா செய்து யாரும் சுவிசேஷம் அறிவிக்காத இடமான இமயமலை பிரசேத்தை தேர்ந்தெடுத்தார். தன் மனைவியை அழைத்துகொண்டு காஸ்மீரில் உதம்பூர் என்ற ஊரில் ஒரு சிறிய குடிசையில் ஊழியம் ஆரம்பித்தார். அது மிலிடெரி கேம்ப்கள் நிறைந்த இடமாகவும் இருந்தது. ஒரு பக்கம் பாக்கிஸ்தான் மறுபக்கம் சீனர்கள் உள்ள பணி படர்ந்த மலையாகும். நிறைய குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். இவர் நடத்திய குடிசையில் ஆராதனையும் தொடங்கினர். அதன்பின் மிலிடெரியில் பணிபுரியும் ராணுவ வீரர்கள் சில கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அபூர்வமாய் ஒரு கிறிஸ்தவ சபை இருப்பதை அறிந்து ராணுவ உடையோடு ராணுவ வீரர்கள் சபையில் கலந்துகொண்டனர்.

ஆராதனை குடிசை தலை இடிக்கும் அளவு உயரம் குறைவானது. ஆகவே ராணுவ வீரர்கள் சேர்ந்து அந்த குடிசையை மாற்றி பெரிய நீளமான ராணுவ டென்ட் போல ஒரு ஆலயத்தை கட்டிப்கொடுத்தார்கள்.

அந்த முதல் ஆலயம்தான் நீங்கள் படத்தில் காணலாம்.



Temporary Worship hall prepared by Army Friends

கர்த்தர் பாஸ்டர் Rt. Rev. P.M. தாமஸ் அவர்கள் நடத்திய ஆராதணையில் நிறைய ராணுவ வீரர்கள் இரட்சிக்கப்பட்டனர்.

புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். இப்போது டென்ட் ஆலயம் கட்டிடமாக மாற ராணுவ வீரர்களும் கேரளத்தில் உள்ள பல குடும்பங்கள் பணம் அனுப்பி உதவினர். உதம்பூர் இஸ்லாமியர், பண்டிட் என்ற இந்து குடும்பங்களில் பலர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர்.




அவர்களின் பிள்ளைகளுக்காக ஆங்கில பள்ளி கூடம் ஆரம்பித்தார் அதன் மூலம் பல குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டனர்.

பாஸ்டர்P.M. தாமஸ் அவர்களுக்கு என்மேல் மிகவும் பிரியம் உண்டு. கேரளத்தில் என் ஊழியத்தையும் என் பிரசங்கத்தையும் அறிந்து என்மேல் உயர்ந்த எண்ணம்கொண்டிருந்தார். அவரின் உண்மையான ஊழியம் மூலமாக சபையில் தொடப்பட்டவர்கள் பெரிய ஊழியர்களாக பல்வேறு இடங்களில் ஊழியம் செய்கிறார்கள்.

அதில் குறிப்பிடத்தக்கவர்கள் பிரபல ஊழியர் P.G. வர்கீஸ் (டெல்லி) Captain A.M. சாமுவேல் Prof. எலியா ஜர்கன் (ஸ்ரீநகர்) T.C. சாக்கோ (இமச்சலப்பிரதேசம்) P.M. ஜோசப் P.M. தாமஸ் அவர்களின் சொந்த சகோததரர் ஆகும். இவர் ஆராதனையில் இரட்சிக்கபட்டவர் அவர் பெயர் P.M. பிலிப் இப்போது உதம்பூர் அருகே ராம் நகர் என்ற இடத்தில் ஊழியம் செய்கிறார். அப்படியே விமானப்படை உயர்அதிகாரி விங் கமேண்டர் பாபு இவர்களெல்லாம் P.M. தாமஸ்அவர்களின் ஊழியம் மூலமாக தொடப்பட்டவர்கள்.



**Dr. Pushparaj** - (Age 79) **Dr. P.M.**



**Bishop Santhosh** Translating my message

1973ம் வருடம் காஷ்மீர் உதம்பூரில் நடந்த முதல் கன்வென்ஷன் கூட்டத்தில் பேச அழைக்கப்பட்டேன். பல ஆண்டுகள் கழித்து என் மனைவியுடன் அவர்களின் வருடாந்திர கூட்டத்தில் பிரசங்கம் செய்தேன். நான்காவது முறையாக 2019 ஜுன் மாதம் மிக நீண்ட பயனம் செய்து காஷ்மீர் ஊழியம் முடிந்து தமிழ்நாடு திரும்பினேன். கூட்டங்கள் ஆசீர்வாதமாக நடந்தேறியது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

Pastor P.M. Thomas மூலமாக பூட்டான், நேபாள், வெஸ்ட் பெங்கால் இன்னும் பல இடங்களில் சபைகளும் பள்ளிக்கூடங்களும் தொடங்கப்பட்டன. Pastor P.M. Thomas அவர்கள மகன் Rev. Dr. சந்தோஷ் அவர்கள்தான் அனைத்து சபைகளுக்கும் பிஷப்பாக பொருப்பெடுத்து நடத்துகிறார். அங்கு நடந்த கூட்டங்களில் என் பிரசங்கத்தை அவர்தான் மொழிபெயர்த்தார்.

கர்த்தர் காஷ்மீரில் என் ஊழியத்தை ஆசீர்வதித்து நீண்ட பயனத்தில் பிரச்சனை ஏதுமின்றி சுகமாக ஆசீர்வாதத்தோடு சேலம் வந்து சேர்ந்தேன்.

## ஆன்-லைன் பேங்கிங் (ONLINE BANKING)

காணிக்கையை மணிடிரான்ஸ்பர்(NET Transfer) வழியாக அனுப்ப விரும்புகிறவர்களுக்கு என்னுடைய வங்கி தகவல்கள்:

**A/c Name : Dr. M.G.E.PUSHPARAJ :**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப (**Overseas Doners):**

**1). Bank Name : State Bank of India - Srirangapalayam Branch - SALEM -1970**

**A/c No. 10764116842, Swift code: SBININBB637**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப **(India Doners):**

**IFSC CODE : SBIN0001970- A/c No.10764116842**

2) **Bank Name: CANARA BANK, (Suramangalam Branch) - 1219**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப(**Overseas Doners):**

**SWIFT CODE: CNRBINBBSLM - A/c No. 1219101013622**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப**India Doners:**

**IFSC CODE : CNRB0001219 - A/c No. 1219101013622,**

**MICR CODE: 636015005.**

## மரண அறிவிப்பு

இலங்கை சத்தியவசனம் (Back to the Bible) முன்னாள் டைரக்டர் **Bro. ரிச்சரட் ஆபிரகாம்** அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். விவரங்கள் அடுத்தமாத ஜாமக்காரனின் வெளியிடுவேன்.

## 2020ம் வருடம் ஜனவரி மாதம் மலேசியா ஊழியங்கள்

கர்த்தருக்கு சித்தமானால் 2020ம் வருடம் மலேசியா நாட்டுக்கு ஊழியத்திற்கு தேதி கொடுத்துள்ளேன். அச்சமயம் மலேசியாவில் வசனம் பகிர்ந்துகொடுக்க என்னை அழைக்க விரும்பும் சபைகள் இப்போதே எனக்கு எழுதி அறிவித்தாலோ email வழியாகவோ தேதி கேட்டு **எழுதினால்** தேதிகள் கொடுத்து இப்போதே என் பயனத்தை ஒழுங்குபடுத்த உதவியாக இருக்கும்.

ஒரு முறை தேதிகள் ஒழுங்குசெய்துவிட்டால் அங்கு சென்றபின் புதிய கூட்ட ஏற்பாடுகள் செய்தால் என்னால் நீட்டிக்க முடியாது. ஆகவே இப்போதே தேதி கேட்டு பெற்றுக்கொள்ள இதை அறிவிக்கிறேன். **காணிக்கை சேகரிக்க நான் வரவில்லை** என்பதை மலேசியா சபை மக்கள் அறிவீர்கள். **சபைகள்** வசனத்தில் **வளர வேண்டும்** என்ற பாரத்தில் வருகிறேன். 2019 **நவம்பர்** மாதத்துக்குள் எந்த வாரம் எத்தனை நாட்கள் கூட்டம் நடத்த ஆசைப்படுகிறீர்கள் என்ற விவரத்தையும் உங்கள் தொலைபேசி எண்ணையும் எனக்கு எழுதி அனுப்பவும். ஜெபத்தோடு எல்லாருடைய ஒப்புதலோடும் கூட்ட ஏற்பாடுகளை செய்து எனக்கு எழுதவும்.

## என் ஊழியங்கள்

| | | | |
|---|---|---|---|
| 2019 | ஆகஸ்ட் | 9, 10. 11 | உடுமல்பேட்டை CSI Church |
| | ஆகஸ்ட் | 16, 17. 18 | புகுக்குடி, நாகர்கோவில் CSI Church |
| | ஆகஸ்ட் | 30 முதல் | குஜராத் ஊழியங்கள் |
| | செப்டம்பர் | 2ம் தேதி | முழுநாள் கூட்டம் (குஜராத்)அகமதாபாத் |
| | செப்டம்பர் | 13,14,15 | காட்பாடி CSI Church |
| | செப்டம்பர் | 3ம் வாரம் | கேரளா |
| | அக்டோபர் | 4,5,6 | சிவகங்கை CSI Church |
| | அக்டோபர் | 11, 12, 13 | தூத்துக்குடி வடகூர் CSI Church |

அக்டோபர் 25, 26, 27. சென்னை மேடவாக்கம் CSI Church

**சென்னையிலுள்ள ஜாமக்காரன் வாசகர்கள் கூட்ட விவரம் அறியவும் என்னை நேரில் சந்திக்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ள : Mr. டேனியேல் ஜெபராஜ்,**

மொபைல் : 94446 67329, 99625 11481

சில மாத இடைவேளைக்கு பிறகு சென்னைக்கு வருவதால் வாசகர்களுக்கு இவ்விரத்தை அறிவிக்கிறேன்.

### என் ஊழிய பிரயான தேதி விவரங்களை ஏன் இதுவரை குறிப்பிடாதிருந்தேன் ?

கடந்த 15 வருடங்களாக என்ஊழியத்தில் ஏராளமான **கொலை** மிரட்டல்களும், **எதிர்ப்புகளும், தாக்குதல்,** திட்டங்கள் பல ஸ்டார் TV ஊழியர்கள் மூலமாகவும் சில பிஷப்மார் மூலமாகவும் கூலி படைகளைக்கொண்டு தாக்கக்கூடும் என்று அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்து அவர்கள் என்னை எச்சரித்தனர்.

குறைந்தபட்சம் உங்கள் Programme ஊழிய பிரயான விவரங்களை பத்திரிகையில் வெளியிடுவதையாவது கொஞ்ஜகாலம் நிறுத்தி வையுங்கள். நீங்கள் புறப்படும் நாள், வந்து சேரும் நாள், ஊழியம் செய்யும் இடங்களை தயவுசெய்து பத்திரிகையில் எழுதி அறிவிக்கவேண்டாம். என்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் அதிகாரிகளுக்கு மரியாதை கொடுக்கும் வண்ணம் என் கூட்ட விபரங்களை ஜாமக்காரனில் அறிவிப்பதை நிறுத்தினேன். மரண பயம்கொண்டு அல்ல என்பது வாசகர்களாகிய உங்களுக்கே தெரியும். சங் 127 **கர்த்தர் நகரத்தை காவாராகில் காவல் காக்கிரவன் விழித்திருக்கிறது விருதா!** கர்த்தர் என்னோடு இருக்கிறார். தாக்குதலை அவர் அனுமதித்தால் அதை நான் ஏற்றுக்கொள்ள தயாராகவே இருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## இந்திய சுதந்திரம்



இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்று தந்த தலைவர்களையும், தியாகிகளையும் வாழ்த்துகிறோம். நாம் இந்தியர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமைகொள்கிறோம். இந்தியா ஜனநாயகநாடாக இருப்பதற்காக கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

**ஆனால் சுதந்திரம் எங்கே?**

இந்தியா சுதந்திரம் பெற்றாலும் இந்தியாவின் தற்போதைய நிலையில் சுதந்திரம் பறிபோய்விட்டதோ என்று சந்தேகப்படவைக்கிறது. ரயிலில் ராமகிருஷ்னா மடத்தினர் குடுமி வைத்து கொண்டு கீதை புஸ்தகங்களும் அவர் மத துண்டு பிரதிகளும் ஒவ்வொரு ஸ்லீப்பர் கோச்சிலும் வினியோகிக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் துண்டுபிரதி கொடுக்கவோ வேத புஸ்தகம் வினியோகிக்கவோ சுதந்திரம் இல்லை. பொது இடத்தில் இயேசுவால் பெற்ற சுகம், சமாதானம் மறுபிறப்பின் அனுபவத்தை சாட்சியாக கூறக்கூட சுதந்திரம் இல்லை. கையோடு பிடித்து மதம் மாற்றுகிறார்கள் என்ற குற்றசாட்டில் ஜெயிலில் அடைக்கிறார்கள். ஆகவே சுதந்திரம் எங்கே? என்றுதான் கேட்க தோன்றுகிறது. இந்தியாவுக்காக ஜெபிக்கிறோம்.

- ஜெய் ஹிந்த்

**AUGUST - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.